# விடுதலைப்புலிகள்

குரல்: 76 ஆடி - ஆவணி 1997 அன்பளிப்பு: 5/—



உள்ளே

★ அவுஸ்ரேலிய அமைச்சரின் அவசரக்குடுக்கைத்தனம்

★ ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பும் விடுதலைப் போர்ப்பண்பும்

★ சர்வதேசத்திற்கு தீர்வுத்திட்டம் தமிழினத்திற்கு போர்த்திட்டம்

★ அனுமார் வாலும் ஆப்பிழுத்த குரங்கும்


# பாரிய பலப்பரீட்சையை

# வன்னிச்சமர்முனை சந்திக்கின்றது

**ஜயசிக்குறுய் 110 நாள் வயதை அடைந்துவிட்டது. அதேவேளை, புளியங்குளம் சந்தியை கைப்பற்றுவதற்காக படையினர் நடாத்தும் சண்டை கடந்த 70 நாட்களையும் தாண்டி, இப்போதும், நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.**

**இந்த 110 நாள் சண்டையில் சுமார் 1200 படையினர் பலியாகியுள்ளனர், ஏறக்குறைய 3500 படையினர் காயமடைந்துள்ளனர். நூறிற்கும் மேற்பட்டோர் படையை விட்டோடியுள்ளனர். இந்தவகையில், ஏறக்குறைய ஒரு பிரிகேட் (சுமார் 5000 பேர்) அளவு படையினர் ஜயசிக்குறுய் களமுனையிலிருந்து அகற்றப்பட்டுவிட்டனர். மொத்தம் மூன்று பிரிகேட் படையினர் நடவடிக்கையை ஆரம்பித்ததாக, முன்னர் செய்தி வெளிவந்திருந்தது.**

வவுனியா – கிளிநொச்சி பாதையை கைப்பற்றி முடிக்க இவ்வளவு படையினர் பலியாக வேண்டிவரும் - இவ்வளவு படையினர் காயமடையக் கூடும் - கைப்பற்றிய பின், வீதிநெடுக நிரந்தரமாகத் துருப்பினரை நிறுத்திவைக்க இவ்வளவு படையினர் தேவைப்படுவர் என்றொரு இராணுவக் கணக்கை, சிங்களத் தளபதிகள் கணித்து வைத்திருப்பர்.

ஆனால், தங்களின் கணக்குப் பிழைத்து விட்டது என்பதையும், புலிகள் புதுக்கணக்கொன்றைத் தமக்குத் தந்து விட்டார்கள் என்பதையும், சிங்களத்தின் களமுனைத்தளபதிகள் உணர்ந்துவிட்டனர்.



சிங்களத்து ராங்க்: ஒரு ஆக்கிரமிப்பு வாகனம்.
புலிவீரர்களால் அழிக்கப்பட்ட நிலையில்...

ஜயசிக்குறுய், இப்போது, பாரிய சவாலைச் சந்தித்து விட்டது என்பதில் சந்தேகமில்லை. இலக்கின் மூன்றிலொரு பங்கை அடைவதற்காக இதற்கென ஒதுக்கப்பட்ட படையாட்களில், மூன்றில் ஒரு பகுதியை, அது இழந்துவிட்டது.

ஜயசிக்குறுய் படையினர் மீதான தாக்குதல் நடவடிக்கைகளிலும் - எதிர்த்தாக்குதல் சண்டைகளிலும், புலிவீரர்கள் கடுமையாகச் சண்டையிடுகின்றனர். எதிரியின் எறிகணை மழையையும் - ராங்க்குகளின் குண்டுவீச்சு உக்கிரத்தையும் எதிர்கொண்டு, புலிப்படை, தன்னம்பிக்கையுடன் போராடுகின்றது.

புளியங்குளம் சந்தியை பாதுகாப்பதற்காக புலிப்போராளிகள் தொடர்ந்து காட்டும் உறுதி, எதிரிப்படையை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. மரபுப் போருக்குரிய அனைத்து கனரக ஆயுதங்களையும் கொண்டபடி – முப்படையின் துணையுடன்–நகரமுனையும் சிங்களப்படைக்கு எதிராக தமிழர் சேனை நடாத்தும் உக்கிரச்சமர், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஜயசிக்குறுய் படையினர் மீதான புலிகளின் சரமாரியான எறிகணைத் தாக்குதல்கள் சிங்களச் சிப்பாய்களை திணறடித்தபடியுள்ளன. பெரு மெடுப்பிலான எறிகணை வீச்சுக்களின் பக்கத் துணையுடன், புலிகள், எதிர்ச்சண்டையில் ஈடுபடுவது புதிய ஒரு இராணுவப் பரிமாணமாகும். புலிகள் வீசும் எறிகணைகள் குறிதவறாது வீழ்ந்து – தமது தரப்பிற்கு அதிகளவு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்துகின்றன என்று களமுனையின் படைத்தளபதிகள், பத்திரிகையாளர்களிடம் புலம்புகின்றனர்.

அத்துடன், நகர்வுச்சண்டையின் நம்பிக்கை நட்சத்திரமாக, படையினருக்கு விளங்கும் ராங்க்குகளை - குருவி சுடுவது போல – புலிவீரர்கள் அழித்து நாசமாக்கி விடுவது சிங்களப்படைக்கு மனச்சோர்வையும் – அவநம்பிக்கையையும் நிச்சயம் ஏற்படுத்தும். இந்தச் சமரில் இதுவரை 15 ராங்க்குகளை புலிவீரர்கள் அழித்துள்ளனர்.

ஜயசிக்குறுயின் தலைவிதியும் சந்திரிகா அரசாங்கத்தின் தலைவிதியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளது. இதனால், என்னபாடு பட்டாவது – முழு வளங்களையும் கொட்டியாவது தரைப்பாதையைத் திறந்தே தீரவேண்டும் என்று அதிஉயர்மட்ட அரசியல் – இராணுவத் தலைவர்கள் விடாப்பிடியாக உள்ளனர். ஆனால், களமுனைத் தளபதிகளினதும் ஜயசிக்குறுய் துருப்புக்களினதும் மனநிலையோ அதற்கு நேர்மாறானதாகவே உள்ளது என்று கொழும்புத் தகவல்களை ஆதாரம் காட்டி, உலகச்செய்தி நிறுவனங்கள் கருத்துத்தெரிவிக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, புலிகள் இயக்கத்தின் 'முடிவுத்திகதி' பற்றி – ரத்வத்த சொல்லிவரும்– சாத்திரக்கணக்கு முடிய இன்னும் நான்கு மாதங்களே உள்ளன. இந்த வருட இறுதியில் போரை வென்று - புலிகளை அழித்து தமிழரின் இனப்பிரச்சனைக்கு ஒரு முடிவு கட்டிவிடலாம் என்ற பேரினவாதத்தின் ஆசை, தொடர்ந்தும், ஒரு கனவாகவே இருந்துவிடப் போகின்றதென்பதை, களயதார்த்தம் புலப்படுத்துகின்றது.

O


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சரின் அவசரக்குடுக்கைத்தனம்

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

அண்மையில் கொழும்பு சென்றிருந்த அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. அலெக்சாண்டர் டௌனர் புலிகள் இயக்கம் தொடர்பாகத் தெரிவித்த சில விசமத்தனமான கருத்துக்களைக் கேட்டு ஈழத்தமிழர் அதிர்ச்சியும் – வேதனையும் அடைந்துள்ளனர்.

பயங்கரவாதச் செயல்களில் புலிகள் ஈடுபடுகின்றனர் என்று வெறுப்புடன் குற்றம்சாட்டி கருத்துத்தெரிவித்திருந்தார். அதேவேளை, புலிகளை முழுமையாக அழிக்கமுயலும் அரசாங்கத்தின் முயற்சிக்கு, தமிழ்க்குழுக்கள் உட்பட அனைவரும், பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று ஆலோசனை கூறி, பொறுப்புணர்ச்சியற்ற முறையில் அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் நடந்துகொண்டுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனையின் ஆழ – அகலங்களை சரிவர அறியாத அரசியல் வறுமை காரணமாக அவ்விதம் பேசினாரா! அல்லது தனது சிங்கள நண்பர்களது பேரினவாதக் கருத்தேற்றங்களுக்குப் பலியாகி அவ்வாறு தவறிழைத்தாரா!

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமருடன் கொண்டிருந்த தனிப்பட்ட நட்புதான், அவுஸ்ரேலிய அமைச்சர் அவ்விதம் பேசக் காரணம் என்று அவுஸ்ரேலிய ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்திருந்ததும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

அவுஸ்ரேலிய மக்களுடனான ஈழத்தமிழரின் நல்லுறவுப்பாலம் நீண்டவயதைக் கொண்டது. இனப்படுகொலைகளுக்கு அஞ்சி – உயிர்ப் பாதுகாப்பிற்காக இடம்பெயர்ந்து – அவுஸ்ரேலிய மண்ணுக்குச்சென்ற பல்லாயிரம் இலங்கைத் தமிழரை ஏற்றுக்கொண்டு – அவர்களையும் தனது பிரசைகள் போல் நடாத்திவரும் அவுஸ்ரேலிய அரசை, ஈழத்தமிழர் என்றும் நன்றியுடன் நினைவுகூர்வர்.

திரு. அலெக்சாண்டர் டௌனரின் புலி எதிர்ப்புக் கூச்சலை அவுஸ்ரேலிய மக்களின் அபிப்பிராயமாக கருதமுடியாது. ஏனெனில், அவுஸ்ரேலிய ஆளுங்கட்சியைச் சேர்ந்த பிறிதொரு பாராளுமன்ற உறுப்பினர் (திரு. பிறட் போட்) தனது வெளிவிவகார அமைச்சரின் கூற்றை கண்டித்து கொழும்புப் பத்திரிகைக்கே செவ்வி கொடுத்தது (ஐலண்ட் ஓகஸ்ட் 10, 97) குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலிய அமைச்சரின் கூற்றால் வேதனையடைந்துள்ள ஈழத்தமிழருக்கு இது ஆறுதலளிக்கும் விடையமாக உள்ளது.

கொழும்பு அரசாங்கத்தின் ஒருபக்க சார்பான கருத்துக்களை செவிமடுத்து – வெறும் உணர்ச்சியால் உந்தப்பட்டு – புலிகள் இயக்கத்தை கண்டன விமர்சனம் செய்யமுற்படுவது வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலரது ஆளுமைக் குறைபாடாகும். திரு. அலெக்சாண்டர் டௌனரும் இந்த வகைக்குள்ளேயே அடங்குகின்றார்.

புலிகளை கண்டிக்க முன்னர், கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஈழத்தமிழர் ஏன் போராடுகின்றார்கள் என்று, திரு. டௌனர், தன்னுள் கேட்டுப் பார்த்திருக்க வேண்டும். அதேவேளை, கால் நூற்றாண்டு காலமாக கடுமையான ஆயுதப்போரை ஏன் புலிகள் நடாத்துகின்றனர் என்பதை அவர் ஆராய்ந்து பார்த்திருக்கவேண்டும். இந்த விடுதலைப் போராட்டத்திற்கு உள்நாட்டிலும் – வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்கள் ஏன் அமோக ஆதரவு காட்டி - போருக்கு உதவுகின்றனர் என்று அவர் சிந்தித்திருக்கவேண்டும். இவற்றைவிட்டுவிட்டு – எடுத்த எடுப்பில் – ஒன்று, இரண்டு சம்பவங்களைக் குறிப்பிட்டு புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று பிரகடனப் படுத்தியது அவுஸ்ரேலிய அமைச்சரின் ஒரு அவசரக்குடுக்கைத் தனத்தைக்காட்டியுள்ளது.

இராணுவத் தீர்வுமூலம் இனப்பிரச்சனையைத் தீர்க்கமுற்படும் சந்திரிகா அரசாங்கத்திற்கு திரு. டௌனரின் கூற்று – நல்ல மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். சந்திரிகா அரசாங்கத்தின் போர்க்கொள்கைக்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் காட்டிய ஆதரவுச் சமிக்கையாகவும் இதை சந்திரிகா அரசாங்கம் எடுத்துக்கொண்டு– போரைத் தீவிரப்படுத்தவும்கூடும். ஏற்கெனவே பேரழிவுகளையும் – பெரும் இடர்களையும் எதிர்கொண்டபடி போருக்குள் வாழும் எமது மக்களுக்கு, இது மேலும் – மேலும் உயிரழிவுகளையும் வாழ்க்கைச் சுமைகளையும் அதிகரிக்கச் செய்யும். இந்த வகையில், தமது அவலவாழ்க்கைக்கு அவுஸ்ரேலியாவும் ஒரு காரணமாக இருக்கப்போகின்றது என்ற அதிர்ச்சிதரும் விடையத்தை எமது மக்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

அவுஸ்ரேலியா அமைதியை விரும்பும் ஒரு நாடு. உலக சமாதானத்திற்காக உண்மையில், குரல்கொடுத்துவரும் ஒரு நாடு. அந்த அமைதி நாட்டின் ஒரு முக்கிய அமைச்சர், போர்வெறி கொண்ட சிங்கள அரசை தட்டிக்கொடுத்து, போர்மூலமே புலிகள் இயக்கத்தை எதிர்கொள்ளும்படி உற்சாகப்படுத்தியிருப்பது அவுஸ்ரேலியாவுக்கு அவப்பெயரை உண்டாக்கும் ஒரு விடயம். உலகளாவிய ரீதியில், உரிமைகேட்டுப்போராடும் தேசிய இனங்கள் அவுஸ்ரேலியாவை சந்தேகக்கண்கொண்டு பார்க்கும் நிலையும் இதனால் எழலாம். இத்தகைய பொறுப்புணர்ச்சியற்ற அமைச்சர்களின் விவேகமற்ற பேச்சுக்கள் அவுஸ்ரேலியாவின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த முயலலாம்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு மூன்றாந் தரப்பு மத்தியத்துவம் தேவைஎன்றகுரல்வலுவாக எழுந்தபோது, பல மேற்கு நாடுகளின் அரசாங்கங்கள் அதற்கு முன்வந்திருந்தன. இதில் முன்னைய அவுஸ்ரேலிய அரசாங்கமும் ஒன்றாகும். மத்தியத்துவராகச் செயற்பட அவுஸ்ரேலியா விருப்பம் தெரிவித்துள்ளது என்ற செய்தி ஈழத்தமிழருக்கு பெரும் உவகையைக் கொடுத்திருந்தது. அந்தளவுக்கு அவுஸ்ரேலிய அரசையும் அதன் மக்களையும் ஈழத்தமிழர் மதித்து – நேசித்திருந்தனர்.

மத்தியத்துவம் செய்யும் தகுதியுடன் உள்ள ஒரு அரசாங்கத்தின் அமைச்சர்கள் மிகவும் நிதானமாக இருதரப்புப் பிரச்சனைகளையும் செவிமடுக்கவேண்டும் – பொறுப்புணர்ச்சியுடன் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும். ஒரு தரப்பை தேவையற்ற வகையில் சீண்டுவது, கடுஞ்சொல்கொண்டு கண்டன விமர்சனம் செய்வது – தனிப்பட்ட நட்புக்காக பக்கம்சார்ந்து பேசுவது தவிர்க்கப்படவேண்டும்.

இலங்கைத்தீவில் சமாதானத்தையும் – இன ஐக்கியத்தையும் விரும்பும் உலகநாடுகள் தமிழ்–சிங்கள இனப்பிரச்சனைபற்றி கருத்துத் தெரிவிக்கும்போது நிதானமாக - பக்கசார்பற்ற வகையில் – ராஜதந்திரமுதிர்ச்சியுடன் தமது அபிப்பிராயங்களை வெளியிடுவதே சாலச்சிறந்தது. ○

# நுணுக்குக்காட்டி

இந்த நிலையில் ஜயசிக்குறுய் நடவடிக்கையின்மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளை தக்கவைப்பதற்காக போதிய படையணி இல்லாத நிலையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாத தன்மையில் இராணுவம் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

ஆயினும் புதிதாக பயிற்சி பெற்ற பொலிசாரையும், வான்படையினரையும், கடற்படையினரையும் கொண்டு தரைவழிப் பாதையைத் திறக்கும் முயற்சியை விடாமல் மேற்கொள்ள வேண்டும் என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு பிடிவாதமாக முனைந்து நிற்கிறது.

வாதத்துக்கு மருந்துண்டு. பிடிவாதத்துக்கு இன்னமும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. ஆழமறியாமல் நீரில்செல்ல முயற்சிப்பதும்சேற்று, நிலத்தினை அலட்சியம் செய்வதும் நன்மையைத் தராது.

– செய்தி

தம்பு திருநாவுக்கரசு

சரிநிகர் ஜுலை 17– 30, 97

---

(ஜயசிக்குறுய் ஆரம்பமான) ஜுன்மாதத்திலிருந்து, வன்னியில், இடம் பெயர்ந்து வாழும் சிறுவர்கள் மத்தியில் போசாக்கின்மை வெளிப்படையாகக் காணப்படுகின்றது. முள்ளிக்குளத்தில் - பாலமோட்டையில் போசாக்கின்மைப் பிரச்சனையை நாங்கள் நேரடியாகப் பார்க்கின்றோம்.

சமிம் மலிக

எம். எஸ். எவ். இணைப்பதிகாரி

சண்டேரைம்ஸ் ஓகஸ்ட் 17, 97

---

புலிகள் தான் பேச்சை முறித்தார்கள் இல்லாவிட்டால் பேச்சு மூலம் பிரச்சனை தீர்ந்திருக்கும் என்கிறது அரசதரப்பு, கடந்த இரண்டரை வருடங்களாக ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏற்கக்கூடிய தீர்வைக்கூட முன்வைக்க முடியாத அரசால், அடித்துப் பேசக்கூடிய பலத்தோடு உள்ள புலிகள் ஏற்கக் கூடிய தீர்வை எப்படி முன்வைக்க முடியும்.

– செய்தி

தினமுரசு ஜுலை 27 – ஓகஸ்ட் 02, 97

---

வடகிழக்குப் பிரதேச மக்கள் இராணுவ ஆக்கிரமிப்புகளில் அழுந்திப்போயுள்ளனர். குடாநாட்டுப் படையெடுப்பு, வன்னிப்படையெடுப்பு இரண்டும் அரசாங்கத்திற்கு எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. மாறாக மக்கள் மனங்களில் வெறுப்புணர்ச்சியே விதைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மக்களை விடுதலை செய்வதாகக் கூறிப் போரிடுகின்றது. மக்கள், தங்களைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமிப்பதாகவே கருதுகின்றனர்.

தமிழ் மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டை ஆண்ட அரசாங்கங்களிடம் சலுகைகளைக் கேட்கவில்லை. உரிமைகளையே கேட்டார்கள். தமிழ் மக்கள் சலுகைகளுக்காகப் போராடவில்லை.

சலுகைகளைக் கொடுத்து தமிழ் மக்களை வென்றெடுக்க நினைப்பதும், தமிழ் மக்களின் உரிமைகளை அமுக்கி சிங்கள பேரினவாதத்தை திருப்திப்படுத்துவதும் தான் சுதந்திரம் பெற்ற காலம் முதலாக ஆண்ட அரசாங்கங்கள் மேற்கொண்ட திருகுதாளங்கள்.

இராணுவ ஆக்கிரமிப்புகளும், கெரிலாத் தாக்குதல்களும், மக்களை மட்டுமல்ல, அரசாங்கத்தையும் எரிமலை மீது குந்தியிருக்கும் உணர்வையே மிஞ்சவைக்கின்றது சிங்கள ஆக்கிரமிப்புப் படைகூட வடகிழக்குப் பிரதேசத்தில் எரிமலை மீது குந்தியிருக்கும் நிலையிலேயே உள்ளது.

– கட்டுரையாசிரியர் மாதொருபாகன்

தினக்குரல் ஓகஸ்ட் 17, 97

---

இலங்கை கிரிக்கெட் அணியின் உலக சாதனைகள், சாதனைக் கொண்டாட்டங்கள் என்ற அமளிகளும் வன்னியில் களநிலவரம் மீதான கவனத்தை திசை திருப்பியிருந்தன.

போர்க்கள நிலவரத்தை அறிவதைவிட கிரிக்கெட் போட்டி நிலவரத்தை அறிவதில் சிங்கள மக்கள் ஆர்வம்காட்டத் தொடங்கி விட்டார்கள்.

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றியபோது தென்னிலங்கையில் இருந்த ஆர்வம் தற்போது மங்கிப்போயிருக்கிறது. புலிகளை வெல்வது அத்தனை சுலபமில்லை, வெற்றி தோல்விகள் மாறிக்கொண்டே இருக்கும் என்று சாதாரண சிங்கள மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

– கட்டுரையாசிரியர் நாரதர்

தினமுரசு ஓகஸ்ட் 17 – 23, 97

# ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பும் விடுதலைப் போர்ப்பண்பும்

இனப்பிரச்சனையின் அரசியல் யதார்த்தத்தை சிங்கள அரசாங்கங்கள் புரிந்துகொள்ள மறுப்பதைப்போலவே, விடுதலைப்போராட்டத்தின் இராணுவப் பண்பையும் கிரகித்துக்கொள்ள அலவ பிடிவாதமாக மறுக்கின்றன.

சிங்களப்படைக்கும், புலிகள் இயக்கத்திற்குமிடையே நடைபெறும் போரை மதிப்பீடு செய்துபார்ப்பதற்காக இரு பகுதிப்படைகளினதும் ஆள் எண்ணிக்கைகளையும் – ஆயுத வகைகளையும், தொகைகளையும் மட்டுமே சிங்கள அரசியல்வாதிகள் கணக்கிலெடுத்து – தவறான முடிவுகளை எடுக்கின்றனர். ஆனால், போரிடும் இருபகுதிப்படைகளினதும் போர்ப்பண்புகள் – இந்தப்பண்புகள் – போரில், சிறுகச்சிறுக ஏற்படுத்தும் பாரிய இராணுவத் தாக்கங்களை சிங்களத் தலைவர்கள் ஏறெடுத்துப்பார்க்க விரும்புவதில்லை.

**குறுகிய காலப்போர் எனின் ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புக்கு வெற்றியைத் தரக்கூடியது.**

**நீண்டகாலப்போர் எனின் அது விடுதலைப் போர்ப்பண்பிற்கு வெற்றியை வழங்கக்கூடியது.**

சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை அது சகல வசதிவாய்ப்புகளையும் பெற்ற ஒரு அரசு. அதனிடம் ஏறக்குறைய ஒரு இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட ஒரு நிரந்தரப்படை உண்டு. சிங்களத்தின் இந்தப்படை, தனது நில எல்லைகளைக் கடந்து, தமிழர்தாயகத்தைக் கைப்பற்றி ஒரு ஆக்கிரமிப்புப்படையாகச் செயற்படுகிறது.

நிலங்களைக் கைப்பற்றுவது – வளங்களை அபகரிப்பது - இனப்படுகொலைகளை நிகழ்த்துவது என்பவை ஆக்கிரமிப்பு அரசுகளின் முக்கிய பண்புகளாகும். இந்த ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புதான் சிங்களப் படைகளது போர்ச்செயற்பாட்டின் அடிநாதமாகும்.

ஒரு போரின் முடிவை, அது வெற்றியோ – தோல்வியோ விரைவாகக் காண்பது ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பின் பொது இயல்பாகும். ஏனெனில், இந்த வகைப் போர்ப்பண்புடைய படையிடம் படைபலம், அதாவது ஆள் ஆயுதவளம் அபரிமிதமாகக் காணப்படும். எனவே போரை நடாத்துவதில் வேகத்தைக் கடைப்பிடிப்பது இதற்கு இலகுவானதாக அமைந்துவிடும். ஆக்கிரமிப்புப் போர்ப்பண்புடைய படைக்கு இருக்கின்ற சாதகமான இராணுவ அம்சம் இதுவாகும். எனினும், வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய காலத்திற்குள் போர் நடந்துமுடிந்துவிடவேண்டும். அப்போதுதான் இந்த வேகம் வெற்றிக்கு வழிசமைக்கும். மாறாக, நீண்ட காலத்திற்குப் போர் இழுபடுமாயின், ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பையுடைய படைகள் அதற்கு ஈடுகொடுக்கமுடியாது திணறத்தொடங்கும். இது ஆக்கிரமிப்புப போர்பபண்புப்படைக்குள்ள முக்கிய பலவீனமாகும். ஏனெனில், இத்தகைய போர்ப்பண்புடைய படையினர்க்கு ஒரு நீதியான அரசியல் இலட்சியம் இருக்கமாட்டாது. இனவெறியால் உந்தப்பட்டு வேற்றுஇன மண்ணை ஆக்கிரமிக்க முயலும் ஆசை, ஒரு அரசியல் இலட்சியமாக அமைய முடியாது. எனவே, ஒரு எல்லைக்கு அப்பால், துன்பங்களைத் தொடராக எதிர்கொண்டு நெருக்கடிக்குள் நின்றுநிலைத்துப் போர்புரியும் மனஓர்மம் ஆக்கிரமிப்புப் படையினரிடம் இருக்கமாட்டாது. நாட்கள் செல்லச்செல்ல, தாங்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் படுகின்றோம் என்ற உணர்வு இவர்களிடம் மேலெழும்.

இவ்விதம் போர் இழுபடும்போது அதன் பக்கவிளைவுகளான பல்வேறு வகைப்பட்ட நெருக்கடிகளுக்கு – வளப்பற்றாக்குறைகளுக்கு முகங்கொடுத்து - தாக்குப்பிடிக்கமுடியாமல் ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பையுடைய படைகள் தடுமாறும். போர்வீரர்கள் மத்தியில் குழப்பமும் - விரக்தியும் – பயமும் குடிகொள்ளும். இவை ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பிற்கிருக்கின்ற பாதக அம்சங்களாகும் இந்தப் பண்பு சிங்களப் படைக்கும் பொருந்தும்.

இதேவேளை, ஆக்கிரமிப்பிற்கு எதிரான – அல்லது – இன ஒடுக்குமுறைக்கெதிரான - விடுதலைப் போராட்டங்கள் தமக்கே உரித்தான தனித்துவமான போர்ப்பண்பைத் தன்னகத்தே கொண்டுள்ளன. விடுதலைப் போர் என்பது மக்கள் அனைவரும், ஏதோ ஒருவகையில், பங்கெடுக்கும் மக்கள்போர்தான். இந்த மக்கள் யுத்தத்தின் அடிப்படை இலட்சியம் தற்காப்பு. எனவே, போரையும் – தம்மையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒரு புறச்சூழல் அவர்களுக்கு இருக்கும் சுதந்திரம் - பாதுகாப்பு - கௌரவம் என்ற விடுதலை இலட்சியங்கள் அவர்களிடம் ஆழவேர்கொண்டிருக்கும். தற்காப்புயுத்தம் அல்லது ஒரு இனத்தின் வாழ்விறகான போர் என்ற வகையில் விடுதலைப் போராளிகளிடம் அதிஉயர் அர்ப்பணிப்பு உணர்வும் – அபார சாதனைகள் படைக்கும் உறுதியும் இருக்கும். அத்துடன், அனைத்தையும் தனது ஆளுமையின் கீழ் நெறிப்படுத்தும் திறமையும் - இலட்சிய உறுதியும் – எதற்கும் சளைக்காத பண்பும் கொண்ட தலைமையை விடுதலைப் போராட்டம் பெற்றிருக்கும்.

**சிங்களப்படையின் தற்போதைய “ வெற்றித் தோற்றத்திற்கு” இந்தப் போர்ப்பண்புவேறுபாடு புரியாமை முக்கிய காரணமாகும்.**

இவைகாரணமாக போரின் இறுதி வெற்றியைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்குவகிக்கும் வீரர்களின் போர் உறுதி, அவர்களின் போர்த்திறன் – தாக்குப்பிடிக்கும் தன்மை – திறமையான தலைமை என்பவற்றில் விடுதலைப் போர்ப்பண்பைக் கொண்டபடையே மேன்நிலையில் இருக்கும். இந்த விடுதலைப் போர்ப்பண்புதான் புலிகள் இயக்கத்தினது போராட்டச் செயற்பாட்டின் மையமாகும். புலிகளின் பலம் இந்த விடுதலைப் போர்ப்பண்பில் ஆழவேர் விட்டுள்ளது.

ஒரு விடுதலைப் போராட்டம் இறுதி வெற்றியைப் பெற நீண்டகாலம் எடுக்கும். ஏனெனில், எதிரி அரசின் ஆக்கிரமிப்புப்படையைப் போலல்லாது விடுதலைச்சேனை தனது ஆட்தொகையை – அதன் ஆயுத வளத்தை- சண்டைத்திறனை அரிவரியிலிருந்து தொடங்கி, பல்வேறு தடைகள் – பின்னடைவுகளைத்தாண்டி படிப்படியாக முழுமை அடைய வேண்டும். இதனால், நீண்டகாலப்போர் என்பது விடுதலைப் போர்ப் பண்பின் கருவிலேயே கலந்துளளது. ஆகவே, காலம் கனியும்வரை அதிக காலத்திற்குப் போரை உயிர்த்துடிப்புடன் நகர்த்திச்செல்லும் விசேட சக்தி விடுதலைப் போர்ப்பண்பிற்குண்டு. அத்துடன், நீண்டகாலப் போரின் எதிர்விளைவுகளான பல்வேறு நெருக்கடிகள் – வளப்பற்றாக்குறைகள் என்பன விடுதலைப்போர்ப்பண்புடன் இசைவாக்கம் கொண்டதாக இருக்கும். அதாவது, தாக்குப்பிடித்தல் என்பது விடுதலைப் போர்ப்பண்பின் கூடப் பிறந்த குணம். நீண்டகாலப்போரில் வெற்றி என்ற மந்திரம், இந்த தாக்குப் பிடிக்கும் சக்திக்குள்ளேதான் குடிகொண்டுள்ளது. இத்தகைய போர்ப்பண்புகள் ஆக்கிரமிப்புப்படைக்கு சிம்மசொப்பனமாக விளங்கும். தாக்குப்பிடித்து முன்னேறும் இந்த விடுதலைப் போர்ப்பண்பைப் பொறுத்தவரையில், புலிகள் இயக்கம், உலகின் மிகச் சிறந்த உதாரணமாக இன்று விளங்குகின்றது.

இதேவேளை, ஆக்கிரமிப்புப்படைகளைப் பொறுத்த வகையில், நிலங்களைக் கைப்பற்றல் என்ற இராணுவ விடயமே வெற்றியின் இறுதி அம்சமாக நோக்கப்படுகின்றது. இதுகாரணமாக நிலங்களை அதிகளவில் கைப்பற்றுவதிலேயே, அவை, அதிக கவனத்தைச் செலுத்தும். அதனுடைய இராணுவ பலம் காரணமாக உடனடியாக அது சாத்தியமானதாகவும் இருக்கும். ஆகவே, ஒரு விடுதலை இயக்கத்திற்கு எதிரான போரில் தான்வெல்வது போன்றதொரு தோற்றப்பாட்டை ஆக்கிரமிப்புப் படைகள், அடிக்கடி தோற்றுவிக்கும். சாதாரண கண்களுக்கு இது வெற்றிபோலவே தென்படும். சிங்களப்படையின் தற்போதைய வெற்றித்தோற்றத்திற்கு இந்தப் போர்ப்பண்புவேறுபாடு புரியாமை முக்கிய காரணமாகும்.

விடுதலைப் போர்ப்பண்பைப் பொறுத்தளவில், எதிரியின்படைகளை, சதாசண்டையிடுவதன் மூலம் இழப்புகளை ஏற்படுத்தி - போரில் வெல்லமுடியாது என்ற மனச்சலிப்பை உண்டுபண்ணி– எதிரிப்படையை செயலிழக்கச் செய்து – மீளமுடியாத நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு நிலங்களை மீட்டெடுப்பதுதான் வெற்றியின் இறுதி அம்சமாக நோக்கப்படுகின்றது. எனவே, ஒரு விடுதலைச் சேனையானது தேவையான ஆட்பலத்தையும் – போதியளவு மரபுப்போர் ஆயுதங்களை பெறும்வரையிலும் – அத்துடன் - எதிரிப்படை தளர்வடையும் வரையும் நிலத்தைக்கைப்பற்றி வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்த விரும்பாது.

அதிஉயர்பலத்தைத் திரட்டிக்கொண்டு ஆக்கிரமிப்புப்போரை நடாத்தச் சென்ற பல இராணுவ வல்லரசுகள் விடுதலைப் போர்ப்பண்பை அடிநாதமாகக்கொண்ட விடுதலை இயக்கங்களுக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் படைகளை விலக்கிக்கொண்ட போர்வரலாறுகள் பூமியில் நிறைய உண்டு.

ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பை இயங்குவிதியாகக் கொண்டிருந்த அதிசக்தி வாய்ந்த அமெரிக்கப்படைகள் - விடுதலைப் போர்ப்பண்பை அடிநாதமாகக் கொண்டிருந்த வியட்னாம் போராளிகளிடம், அவமானகரமாகத் தோல்விகளைத் தழுவியிருந்தன.

இந்தவகையில், இப்போது, குறுகிய காலப் போரில் சாதக அம்சங்களைக்கொண்ட ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பையுடைய – சிறீலங்காப்படைகளும் – நீண்டகாலப் போரின் - சாதக அமசங்களைக்கொணட– விடுதலைப் போர்ப்பணபையுடைய– புலிப் படையும் மிக உக்கிரமாகப் போரை நடாத்துகின்றன. போர் தொடர்ந்து நடைபெறத்தான் போகின்றது. புலிகளின் கை ஓங்கத்தான் போகின்றது. சிங்களப்படை சோர்வடைந்து – தமிழர் தாயகத்தை விட்டு வெளியேற்றப்படத்தான் போகின்றது. ○

# சர்வதேசத்திற்கு தீர்வுத்திட்டம் தமிழினத்திற்கு போர்த்திட்டம்




3 வருட ஆட்சி நிறைவை, சந்திரிகா அரசாங்கம் அடைந்து விட்டது. அந்த நிறைவுநாளை அடுத்துக் கூட்டப்பட்ட பாராளுமன்றக் கூட்டம் போதிய உறுப்பினர்கள் வராமையால் ஒத்திவைக்கப்பட்டது. மூன்று ஆண்டில் சாதித்ததாக எந்தச் சாதனையை பிரமாதப்படுத்துவது! என்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களின் அங்கலாய்ப்பு, வராமைக்கு காரணமாக இருந்திருக்கலாம்

சிங்கள – தமிழ்மக்களுக்கென எத்தனையோ அரசியல் - பொருளாதார வாக்குறுதிகளை, ஆட்சிக்குவரமுன், அம்மையார் வழங்கியிருந்தார். வாழ்க்கைச் செலவீனத்தைக் குறைத்து – வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலிருந்து இனப்போரை நிறுத்தி - பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவது வரை பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வழங்கியிருந்தார். இந்த மூன்று வருடத்தில் எதுவுமே நிறைவேற்றப்படவில்லையென சிங்கள அரசியல் விமர்சகர்கள் பிரகடனப்படுத்துகின்றனர்.

தமிழரின் பட்டணங்களை அழித்து – ஆக்கிரமிக்கும் ஒவ்வொரு இராணுவ வெற்றிச் செய்தியுடனும் - ஒவ்வொரு கிரிக்கெட் வெற்றிச் செய்தியைத்தொடர்ந்தும், சிங்களவர் மகிழ்ச்சியடைந்திருக்கும் பொழுது, பொருட்களின் விலைகள் கூட்டப்படுகின்றன.

போரின் கொடூரத்தையும் - அது ஏற்படுத்தும் அவலவிளைவுகளான அநாதைகள்– விதவைகளின் சோகவாழ்க்கைகளையும்– அன்று– நயம்பட உணர்ச்சிபூர்வமாக எடுத்துரைத்து வாக்குக்கேட்ட தேர்தல் காலம் நினைவுக்கு வருவது தவிர்க்கமுடியாதுள்ளது.

இலங்கைத்தீவின் வன்முறை அரசியல் போக்கிற்கு தனது தந்தையை இழந்த ஒரு அநாதைப் பெண்ணாக தன்னை உதாரணம் காட்டியும் – கணவனைப் பறிகொடுத்த ஒரு விதவைத்தாயாக தன்னையே சுட்டிக்காட்டியும் அவர்செய்த உணர்ச்சிமிகு தேர்தல் பிரச்சாரம் கைமேல் பலன்கொடுத்தது. சிறீலங்காவின் தேர்தல்வரலாற்றில் அம்மையாரின் வெற்றி, ஒரு சாதனையாகப் பதியப்பட்டது. அமைதிப்புறா, சமாதானதேவதை என்ற பட்டங்களும் சூட்டப்பட்டன. ஆனால் நடந்தது என்ன!

இலங்கைத்தீவின் வரலாற்றில் என்றுமேயில்லாதவகையில் கடந்த இரண்டரை வருடத்தில்- சந்திரிகாவின் ஆட்சியில் - மனித உயிர்கள் அழிந்தொழிந்துள்ளன. தமிழ் – சிங்கள இனங்களைச் சேர்ந்த சுமார் 12.000 பேர் இந்த இரண்டரைவருடப் போரில் இறந்துள்ளனர். பல்லாயிரம் இளம் பெண்களும்– குழந்தைகளும் - விதவைகள் அல்லது அநாதைகள் என்ற வகைக்குள் அடங்கி துயரவாழ்க்கை வாழ்கின்றனர். இடப்பெயர்வுகளாலும் – பட்டினிகளாலும் பல இலட்சம் தமிழர்கள் வதைக்கப்படுகின்றனர். எனினும், சந்திரிகா அரசாங்கம், போரை, மேலும் தீவிரப்படுத்துகின்றது. தமிழர் ஊர்கள் ஒவ்வொன்றாக சிதிலமாக்கப்பட்டு, கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆக்கிரமிப்புப்படைகளின் ஆட்சியின்கீழ் தமிழ்மக்களின் வாழ்க்கை நசித்து – நகர்கின்றது.

சமாதானம் பற்றியும்–போர் ஒழிப்புக் குறித்தும் உணர்ச்சி பூர்வமாக உரைகள் ஆற்றிய அம்மையார், இப்போது போரின் அவசியம் குறித்தும் – போர் விரிவாக்கம் பெறவேண்டிய தேவையை விளக்கியும் முழங்கி வருகின்றார்:

சமாதானச் சங்கை ஊதியும் சிங்களமக்களது ஆதரவைப் பெறமுடியும் – போர் முரசுதட்டியும் அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற விநோத உளவியல்மனதுடன் சிங்கள மக்கள் உள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிங்களதேசத்து அரசியல், சிங்கள – பௌத்த பேரினவாதச் சித்தாந்தத்திலேயே மையங்கொண்டுள்ளது. சிங்கள – பௌத்தர்களுக்கென்றே கௌதமபுத்தர் கொடுத்த புனிதத்தீவாக, இலங்கைத்தீவை, அது கருதுகின்றது. எனவே, மற்றைய இனங்களுக்கு – மதங்களுக்கு தீவு சொந்தமல்ல வேண்டுமானால் 'மரம் மேல் படரும் கொடியாக இருந்துவிட்டுப்போகலாம் என்பதே அதன் அரசியல் நிலைப்பாடு.

பேரினவாதத்தின் இந்த ஆதிக்கக் கொள்கைக்கும் அதன் அரசியல் நிலைப்பாட்டிற்கும் தமிழினம் பிரதான சவாலாக விளங்குகின்றது. இந்த இன முரண்பாட்டை, சிங்கள அரசியல்வாதிகள், தமது பதவி வேட்டைக்கான பலிபீடமாக பயன்படுத்திவருகின்றனர். பேச்சாலும், செயலாலும் சிங்களமக்களுக்கு இனவெறியூட்டி அரசியல் இலாபம் தேடிவருகின்றனர். இந்தப் பேரினவாதப் போதையாலும் - தமிழினப் பகைமையாலும் சிங்களவரின் அரசியல்மனம் ஆக்கப்பட்டுக்கிடக்கின்றது. இந்த நிலையில், தமிழ்மக்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் போர்முரசு கொட்டும்போது, சிங்களமக்கள். அதற்கு ஆதரவுதெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தின் எதிரியான தமிழ்இனத்தை வெற்றிகொள்ளும் எண்ணத்துடன், போரை சிங்கள இனம் ஏற்றுக்கொண்டாலும், போரின் துயரவிளைவுகள் தங்கள் முற்றங்களிலேயே கண்ணீரைச் சிந்தச்செய்து சிங்கள சமூகத்தையே உலுப்பத்தொடங்கியபோது சமாதானத்தின் தேவையையும், சிங்களவர், உணர்ந்தனர்.

இவ்விதம் போரின் தாக்கத்தை தாங்கிக்கொள்ளமுடியாது – சிங்களதேசம் – சமாதானம் காண விளைந்த அரசியற்போக்கு, இரண்டாம் ஈழப்போரின் முக்கிய விளைபொருளாகும். அதற்கு முன்னர், அங்கொன்றும் – இங்கொன்றுமாகவே, சிங்கள ஊர்கள், போர்ச்சாவைச் சந்தித்துக்கொண்டிருந்தன. ஆனால், இரண்டாம் ஈழப்போர்க் காலத்தில் (1990-94) சிங்களதேசம் – முதற்தடவையாக – போர்ச்சாவுகளால் அதிர்ந்தது. இத்தகைய நிலையில் சமாதான கோசம் அவர்கட்கு சங்கீதமாகியது.

ஒருபுறம் போர்மனதுடனும் - மறுபுறம் சமாதானமனதுடனும் இருந்த சிங்களவர் மத்தியில் சமாதானமனதை தட்டிக்கொடுத்து- ஊக்குவித்து ஆட்சிபீடமேறிய சந்திரிகா அம்மையார், பின்னர், போர்மனதை உசுப்பிவிட்டு – உற்சாகப்படுத்தியபடி ஆட்சியை தொடர்ந்துகொண்டிருக்கின்றார்.

யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு சிங்களமக்களின் போர்மனதிற்கு நல்ல தீனிபோன்றமைந்தது. இப்போது, சிங்களப் படைகள் வன்னிப்பகுதிக்குள்ளும் புகுந்து புலிகளை ஒட்டுமொத்தமாக அழித்து - தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க முயற்சி செய்கின்றன என்று சிங்களமக்களுக்கு ஆசையூட்டப்படுகின்றது. ஒருவருடத்திற்குள் போர் முடிந்துவிடும், பின்னர், போருக்குச் செலவழித்த பணம் சிங்களமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பயன்படுத்தப்படும் என்றும் உறுதிகூறி சோகங்களையும் – வாழ்க்கைச்சுமைகளையும் தற்காலிகமாகத்தாங்கும்படி சந்திரிகா அரசாங்கம் கேட்கின்றது.

வழமையான பேரினவாதத் தலைவர்களைப் போன்று தமிழர்களுக்கெதிரான இனவெறிக்கருத்துக்களை, சந்திரிகா அம்மையார் வெளிப்படையாகப் பேசுவது மிகக்குறைவு.

சமாதானம் பற்றியும் - போர்ஒழிப்புக்குறித்தும் உணர்ச்சி பூர்வமாக உரைகள் ஆற்றிய அம்மையார், இப்போது. போரின் அவசியம் குறித்தும் - போர் விரிவாக்கம்பெறவேண்டிய தேவையை விளக்கியும் முழங்கிவருகின்றார்.

சமாதானச்சங்கை ஊதியும் சிங்களமக்களது ஆதரவை பெறமுடியும் - போர் முரசுதட்டியும் அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற விநோத உளவியல்மனதுடன் சிங்கள மக்கள் உள்ளனர்.

போர், புலிகளுக்கு எதிரானதேயல்லாமல் தமிழ்மக்களுக்கு எதிரானதல்ல என்று விளக்கம் கொடுத்து - வியாக்கியானம் செய்தபடி தமிழ் இனத்தின் மீது போர் அரக்கனை, அம்மையார், ஏவிவிட்டுள்ளார். போரின் விளைவுகளால் தமிழர் துன்பப்படும் போது 'புலிகள்தான் இதற்குக் காரணம்', என்றும் 'அரசாங்கம் சமாதானத்தையே விரும்புகின்றது என்றும் கதையளக்கின்றார். தனது பேரினவாதக்கொள்கைகளை மிகவும் நாசூக்காக செயற்படுத்துகின்றார். பேச்சளவில் இனசமத்துவத்தை தூக்கிப்பிடிக்கமுயற்சிக்கின்றார். செயலளவில் பேரினவாத உணர்வுடனேயே நடந்து கொள்கின்றார். உண்மையில், சந்திரிகா அம்மையார், ஒரு நவபேரினவாதி.

தமிழ்மக்களை ஒவ்வொருவராகக் கொலை செய்து ஒரு தமிழினப்படுகொலையை அரங்கேற்ற வேண்டும் என்பதைவிட, தமிழர் தேசியத்தையும் அதன் போராட்ட சக்தியையும் அழித்துவிடுவதிலேயே அம்மையார் அதிக அக்கறை காட்டுகின்றார். புலிகள் இயக்கம்தான் தமிழர் தேசியத்தின் பாதுகாவலன் என்பது அவருக்கு நன்கு தெரியும். புலிகளின் இராணுவபலத்தை நசுக்கிவிட்டால் தமிழர்தேசியத்தின் முதுகெலும்பு முறியும் என்று அவர் கணிக்கின்றார். அதைச்சாதிக்க, ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் பலியிடவும் - பல்லாயிரம் தமிழர்களைக் கொல்லவும் – பலகோடி ரூபா பணத்தை செலவிடவும் அவர் ஆயத்தமாக இருக்கின்றார்.

வெறுமனே போரை மட்டும் நடாத்திக்கொண்டிருந்தால் சர்வதேசசமூகம் அதை ஏற்றுக்கொள்ளாது. எனவே, புலிகளை அழிக்கும்வரை, அதாவது, போர்நடைபெறும்வரை, அரசியல் தீர்வுத்திட்டம் என்றும் – அதுபற்றிய கலந்துரையாடல்கள், கருத்துப்பரிமாற்றங்கள் என்றும், அரசாங்கம், காலத்தை ஓட்டிக் கொண்டிருக்க விரும்புகின்றது.

தமிழர்போராட்டத்தின் ஏகபிரதிநிதியாக இன்று புலிகள் இயக்கமே உள்ளது. இது அனைவரும் அறிந்த – வெளிப்படையான உண்மை. எனினும், புலிகள் இயக்கத்துடன் பேசி இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வுகாண சந்திரிகா அரசாங்கம் மறுக்கின்றது. அதற்குப் பதிலாக தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்டு – போராட்டத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு – இன்று – தமது தனிப்பட்ட நலன்களை பெறுவதற்காக பேரினவாதத்துடன்

சரியாக விளங்கிக்கொள்ளாமை தமிழினத்திற்கு கவலையளிக்கின்றது.

'இந்த வருட (97) முடிவுக்குள் புலிகளை அழித்து – போரை முடிவுக்கு கொண்டு வரமுடியும் என்று, ரத்வத்த, தொடர்ந்தும் கர்ச்சித்துக்கொண்டிருக்கின்றார். 'புலிகளின் 85 வீத பலத்தை ஏற்கெனவே அழித்து விட்டோம்' என்றும், மிகுதியை அழிப்பது ஜயசிக்குறுயின் நோக்கங்களில் ஒன்று என்றும் பிரகடனப்படுத்தியுள்ளார்.

பிரதான அரசியல்திட்டமாக, புலிகளுடனான போரே விளங்குகின்றது.

பிரதான அரசியல் வேலைத்திட்டம் என்ற முக்கியத்துவத்தைப் போர் பெற்றதனால், சந்திரிகா அம்மையாரின் ஆட்சிவறுமை வெளித்தெரியாமல் அமுக்கப்பட்டுவிட்டது. பேரினவாதப்போர் உளவியலுக்குள் சிங்கள மக்களை அமிழ்த்தி –

**வெறுமனே போரைமட்டும் நடாத்திக்கொண்டிருந் தால் சர்வதேசசமூகம் அதை ஏற்றுக்கொள்ளாது. எனவே, புலிகளை அழிக்கும்வரை, அதாவது, போர்நடைபெறும் வரை அரசியல் தீர்வுத்திட்டம் என்றும் - அதுபற்றிய கலந் துரையாடல்கள், கருத்துப்பரிமாற்றங்கள் என்றும், அரசாங்கம், காலத்தை ஓட்டி, சர்வதேசத்தை ஏமாற்றமுயற்சிக்கின்றது.**

ரத்வத்தவின் போர்க்கணக்கை ஏற்கவிரும்பும் ஒருவர், ஜயசிக்குறுய் படையினர், இபபோது சந்திக்கும பாரிய இழப்பும் - பிரமாண்டமான எதிர்பபும் புலிகளின் 15 வீதபலத்தில் தான் நடக்கின்றதுஎன்று ஏற்றுக்கொள்ளவேண்டிவரும். ரதவத்தவின் இந்தப் போர்க்கணக்கு யதார்தத்தை அடித்தளமாகக் கொண்டது அல்ல; மாறாக, அவரின் பேரினவாத ஆசையை, இராணுவக்கனவையே அச்சாணியாகக்கொண்டுள்ளது.

இதேவேளை, சந்திரிகா அம்மையாரோ, போர் வெற்றிகொள்ளப்படும் காலமாக

அவர்களின் போர்மனதை உசுப்பிவிட்டு – ஒரு இராணுவ ஜெனரலைப்போல சிறீலங்காவின் ஆட்சியை ஓட்டிக்கொண்டிருக்கின்றார்,

அடுத்த வருட (98)முடிவில் போரைவென்று, அதற்கு அடுத்த வருட (99) முடிவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலையும் வெற்றிகொள்ளும் திட்டத்துடன் சந்திரிகா அம்மையார் உள்ளார்.

அரசாங்கம் எதிர்பார்க்கின்றபடி இந்த ஆட்சிக்காலத்தில் போர்முடிவுக்கு வராதுவிட்டால், போரை, அடுத்த ஆட்சிக்காலத்திற்கும் எடுத்துச்செல்லவே அது விரும்புகின்றது. போரில் புலிகளைத் தோற்கடித்தால், சிங்களப்படைகளின் அதிகார ஆளுகைக்குள் தமிழர்தாயகத்தை நிரந்தரமாக வைத்திருக்கலாம் என்று கனவு காண்கின்றது. இப்படி ஒருநிலை எழுந்தால் வெளிநாடுகளை ஏமாற்ற சந்திரிகா அரசாங்கம் பயன்படுத்திய கவர்ச்சிப் பொருட்களான அரசியல் தீர்வுத்திட்டம் – அதிகாரப்பரவலாக்கல் என்பவற்றை, காலத்துக்கொவ்வாத விடயமெனச்சொல்லி, தூக்கியெறிந்துவிடும்.

இதேவேளை நிபந்தனைகள் என்ற பூட்டுக்கள் போட்டு சமாதானக்கதவை, சந்திரிகா அம்மையார், நிரந்தரமாகப் பூட்டிவிட்டார். உண்மையில், தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வையே, தொடர்ந்தும், அமுல்நடாத்த அரசாங்கம் விரும்புகின்றது. இதனால், தமிழினமும், தனது படைபலத்தை அதிகரித்து அரசாங்கத்தின் திட்டத்தை முறியடிக்க வேண்டியுள்ளது.

இந்தநிலையில் தமிழரின் விடுதலைச்சேனையாகிய புலிப்படையின் இராணுவ பலத்திலேயே தமிழினத்தின் அரசியல்வெற்றி தங்கியிருக்கின்றது, இந்த



கைப்பற்றப்பட்ட மரபுப்போர் ஆயுதங்களுடன் தலைவர் பிரபாகரன்

தோழமை பூண்டுள்ள தமிழ்க்குழுக்களை, தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளாகப் பிரகடனப்படுத்திவிட்டு அவர்களுடன் பேசவே, அரசாங்கம், விரும்புகின்றது. தமிழர் தேசியத்திற்கு துரோகமிழைப்பவர்களை தமது அரசியல் நண்பர்களாக வரித்துக்கொள்வது சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் ஒரு பண்பாகும்.

போர்நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே, சமாதானம் பற்றிப்பேசும் ஒரு நடைமுறை உலகநாடுகளில் உள்ளது. ஆனால், போரிடும் தரப்பை விலக்கிவிட்டு, போருடனோ - போருக்கான அரசியலுடனோ எதுவித சம்பந்தமுமில்லாத வேறு ஒரு தரப்புடன் சமாதானம் பற்றிப் பேசமுயலும் கேலிக்கூத்தை சந்திரிகா அரசாங்கம் அரங்கேற்றியுள்ளது.

இந்த வினோத அணுகுமுறைக்கான அரசியல் காரணிகளை சர்வதேச நாடுகள்

அடுத்த ஆண்டு இறுதிப் பகுதியைக்குறிப்பிட்டு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு போர்மூலம் தீர்வு என்பதே சந்திரிகா அரசாங்கத்தின் நிலைப்பாடு. பொதுஜன ஐக்கிய முன்னணி

**புலிப்படையின் இராணுவ பலத்திலேயே தமிழினத்தின் அரசியல்வெற்றி தங்கியிருக்கின் றது. இந்த அரசியல்வேதத்தை ஈழத்தமிழினம் என்றும் மறக்கக்கூடாது.**

அரசாங்கத்தினுடைய இந்த ஆட்சிக்காலத்தின் (1994–99)

அரசியல்வேதத்தை ஈழத்தமிழினம் என்றும் மறக்கக்கூடாது. ○

# எம்மண் ஏறிவருவோனே!

## வருகுது மாரிகாலம்

## உனக்கினி ராகுகாலம்.



ஆவணிமாதம் தாவணி போர்த்துளது.
இடிக்கும், மின்னலுக்கும்
இனிவரும் நாட்கள் கூத்தாடும்.
மேகம் எம்தலைக்குமேலே மூட்டமிட்டு
உருகியுருகிச் சொரியும் பெருமழை.
வேர்காய்ந்து கிடந்தனயாவும் விழிதிறந்து
ஊரெல்லாம் பச்சைநிறப்பட்டுடுக்கும்.
சிரித்துக்கொள்ளும் எம்திருவாசல்கள்.
மாறிமாறிக் கோடையும், மாரியும் கொலுவேற
கோடை வெய்யிலிற் கொதிப்பதும்
மாரி மழையிற் குதிப்பதும்
வாழ்வின் இரண்டுபக்கங்களான வழமை.
நேற்றோடு போயின அக்கினிநாட்கள்.
காற்றள்ளிக் கொட்டிய புழுதி கலைந்துபோக
இனிச்சீதளக் காற்றின் இதமான வருடல்.
மேகமே! இறங்கு எம் தேசத்தின் தலையில்.
தாகமடங்கித் தவித்தவாய் குளிரட்டும்.
அகதிக் குடியிருப்புக்கள் ஆனந்தம் கொள்ள
நீரற்ற கிணறுகள் நிரம்பட்டும்.
இனியாவது குளித்திருக்கட்டும் குழந்தைகள்.
கூரையற்றிருக்கும் அகதிமுகாம்களின் மேலே
நீரையள்ளிக் கொட்டாதே முகிலே.
பாவம் தமிழர்கள் பட்டதுயர் போதும்
மேயாத கூரைவிட்டு முற்றத்திலிறங்கு மழையே.
காடேறி வீட்டிலிருந்து கலைத்தாள்.
பூர்வீகப் பூமிவிட்டு எவர்தான் ஓடாதார்?
ஓடியோடி இடையிலொரு துண்டுமின்றி
ஆடிப்போனது தமிழரின் வேர்கள்.
வேர்த்தலையில் நீர்தெளிப்பாய் மாரியே!
புதிதாய் முளைக்கட்டும் எம்பொன்னாடு.
ஏறிவரும் தேரின் சக்கரங்கள் புதைய
இடையில் ''ஜயசிக்குறுய்'' நீரிலமிழ்ந்து போகும்.
சபித்தவாய்ச்சாபங்கள் பலிக்காமற் போகாது.
நேற்று; மகிழ்ச்சிமத்தாப்பு விரித்திருக்க
ஏணையாடும் குழந்தையென இருந்தோம் நாம்.
கோபுரக்கலசமென உச்சத்திருந்தது எம்வாழ்வு
ஆனந்தம் கையளைந்து கொள்ள நிமிர்ந்திருந்தோம்.
எல்லாம் இல்லாமற் போக
இடியிறங்கியது எம் தலையில் -
காட்டெருமையென எம்வயல் புகுந்து
காலால் மிதித்தனர்.
ஏனென்று கேட்டபோது இடித்தனர்.
வெடிகொளுத்திப் போட்டோம்.
வெகுண்டு விண்ணுக்கும் மண்ணுக்கும் குதித்தனர்.
அன்றுதான் தொட்டது அழிவு.
சுமக்கமுடியாத பாரம் தோள்களில்.
எனினும் களைக்கவில்லை நாம்.
குருத்தோலையும் காவோலையும் ஒன்றாகக் கருகுகின்றன.
எந்நாளும் வந்துபோக முடியாதென்று
இப்போது எம்மூரிலேயே குடியிருக்கின்றான் இயமன்.
எருமைமாடு இளைத்துவிட்டதாம் நடந்து.
எத்தனையென்றுதான் சுடலைக்குக் காவுகின்றது.
அலுத்துவிட்டது. அடிவளவுக்குள்ளேயே கொழுத்துகின்றோம்.
ஆயினும்,
காற்றிலணையும் தீபமல்ல எம்கையிலிருப்பது.
இது சோதிப் பிழம்பு.

புயலுக்கும் அணையாத புதுவிளக்கு.
உயிர்விட்டேற்றிய உரிமைவிளக்கு.
எண்ணையற்றுப் போனாலும் இந்த விளக்கு எரியும்.
பகையே! வழிதிறக்கவரவில்லை நீங்கள்
ஐயோ பாவம்.
உங்கள் குழிதிறக்க வருகின்றீர். வருக.
இந்த மழைகாலம் உங்களுக்குப் படுமோசம்.
மந்திரித்து நூல்கட்டி
வெள்ளரசில் நேர்த்திகட்டி
வீட்டில் விடைபெற்று வருக
தாண்டிக்குளம்,
இறம்பைக்குளம்,
புளியங்குளம்,
கனகராயன் குளமென்று
எல்லாக் குளத்துள்ளும் இறங்கத் துடிக்கின்றீர்.
ஏதோவொரு குளத்தோடு இல்லாமற் போவீர்.
இந்த மழைகாலம் முடியமுன்னர் இது நடக்கும்.
தர்மம் எத்தனைகாலத்துக்குத்தான் தலைகுனியும்?
ஆணவம் தலைக்கேறியதனைத்தும் அழியும்.
கோவணமுமின்றித் தவிக்கும்.
இது வரலாறெழுதிய தீர்ப்பு.
கடைசித்தமிழனும் அழியும் நாளுக்காகக் காத்திருப்பவர்களே!
எழுந்து நடவுங்கள். இது நடக்காது.
எத்தனைபேரின் கால்களின் கீழே
இத்தனை வருடங்களாகக் கிடந்தது எம்மண்.
செத்தாபோனது எம் திருநாடு?
பிரபாகரனையல்லவா பிரசவித்துக் கொண்டது.
எல்லாளனை வேலாலெறிந்து வீழ்த்திவிட்டு
அப்பாடா என்று நீங்கள் ஆசுவாசப்பட்டபோது
காலமொன்றுக்காகக் காத்திருந்தது எம்தாயகம்.
இன்று நீண்டகாலத்தின் பின் நிமிர்ந்துளது.
கைகட்டிச் சேவகம் செய்து
கொடுத்ததை உண்டுகிடக்கும் சதுப்புநிலமல்ல...
எம் அன்னைமடி.
இது கருங்கல்லுப்பூமி.
உடைந்து சிதறுமேயன்றி... உடல்வளைத்துக் கொள்ளாது.
சுற்றிவளைத்தாயானால் சூடேறும்.



## உலைக்களம்

**- வியாசன்**

கற்பனைக்குமெட்டாத விலைகொடுத்து
அற்புதம் விளைக்கும்.
எல்லாம் முடிந்ததென இருக்க இடிமுழங்கும்.
மாங்குளத்தைப் பிடிக்கவா வருகின்றாய்?
குறித்துக்கொள்.
மதவாச்சியையும் தந்து போவாய்.
புலிகளுக்குப் புண்ணாக்குத்தீத்துவேனெனப் புறப்பட்டவனே!
இயமனுக்கே இடியப்பம் தீத்தியவனடா தமிழன்.
வன்னிமண்ணிலிருந்து ஒரு வரலாறு ஆரம்பம்.
''கண்டிவீதி'' தான் அதற்கான முன்னுரை.
சும்மா உறங்கிக் கிடந்தன எம்காடுகள்.
குண்டடித்து விழித்தெழச் செய்தாய்.
நன்றியுனக்கு.
இனிக் காடுகள் போரிடும்.
இந்தியச்சிப்பாய்களும் இங்கேதான் ''ஞானம்'' பெற்றார்கள்
நீயும் வருகின்றாய் உனக்குமது கிட்டும்.
அடிமுடியறியாதது தொடுவானம்.
அளந்து கணக்கெடுக்க முடியாததை
எப்படி அழிக்கமுடியும்?
விடுதலை.
புலிகளுக்கு இதுதான் பெரியபிடிமானம்.



எமக்குவேண்டும் 'விடுதலை' என்றதும்
என்னது? அதனுட்பொருள் யாதெனச்
சுமக்கவேண்டிய சுந்தரம் அறிகிலார்
சுதந்திரத்தை எங்கெலாம் தேடுறார்.
சிவக்கும் வைகறை வானத்தில் ஒளியெனச்
சிரிப்பதான நிலையது விடுதலை.
தமக்குவேண்டிய தனைத்தும் தான்பெறும்
சக்திகைவரல் விடுதலை என்பதாம்.

# ஆண்டுகளும் - 'ஆமி' இழப்புகளும்

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் இராணுவ நிலவரம் பற்றிய ஒரு வெளிச்சத்தை இக் கட்டுரை தருகின்றது. சுமார் 25 வருடகால ஆயுதப்போரில், படைத்தரப்பின் ஆள் இழப்பு விபரத்தை, ஆண்டுவாரியாக இது வழங்குகின்றது. சிங்கள அரசாங்கம் கூற விரும்புவதுபோல போர் ஒரு இறுதிக்கட்டத்திற்கு வந்து கொண்டிருக்கவில்லை. அதற்குப்பதிலாக, போர் விரிவாக்கம் கண்டுவருகின்றது என்ற இராணுவ யதார்த்தத்தையும் இக் கட்டுரை விளக்குகின்றது. படைத்தரப்பின் ஆள் இழப்பும்- படைச் செலவீனமும் – படைக்கல இழப்பும் ஏறுமுகமாக – படுவேகமாக – அதிகரித்துச் செல்கின்றது என்ற உண்மையை இதில் கண்டுகொள்ளலாம்.

அதிலும் கடந்த இரண்டு வருடப்போரில் ( 95 – 97 ) படைத்தரப்பு சந்தித்த ஆள் இழப்பின் மொத்தத்தொகையானது, அதற்கு முன் நடந்த சுமார் 22 வருடப் போரில் ( 72 – 94 ) ஏற்பட்ட படைத்தரப்பு இழப்பைவிட அதிகம் என்ற உண்மையை [ அட்டவணை 1 ] காட்டுகின்றது ' மூன்றாம் ஈழப்போர் ' என்று இராணுவ விமர்சகர்களால் அடையாளப்படுத்தப்படும் இந்தக்காலப்பகுதியிலே போர் பெருமெடுப்பில் விரிவாக்கம் கண்டு வருகின்றது. இந்தக் காலப்பகுதியில், தமிழர் தாயகத்தின் முக்கிய சில பட்டணங்களை சிங்களப் படைகள் கைப்பற்றியுள்ளன. இந்த நில ஆக்கிரமிப்பு அம்சத்தை போரின் வெற்றியாக சிங்களம் கருதுகின்றது. எனினும். இது வெற்றிபற்றிய தவறான இராணுவ மதிப்பீடு என்ற உண்மையை கண்டுணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை. [3-ஆம் பக்கத்திலுள்ள ஆக்கிரமிப்புப் போர்ப்பண்பும் - விடுதலைப் போர்ப்பண்பும் என்ற கட்டுரையை வாசிக்கவும்]

அருகிலுள்ள கோட்டுவரைபடத்தின்படி ( GRAPH ) இராணுவ இழப்புக்களைப பொறுத்தளவில் – ஒரு சில ஆண்டுகள் இறங்கு முகமாகத் தென்படுவதைக் காண முடியும். குறிப்பாக 91 ஆம் ஆண்டும், 94 ஆம் ஆண்டும் படைத்தரப்பில் ஆள் இழப்பு குறைவாக ஏற்பட்ட ஆண்டுகளாக வரைபடம் காட்டுகின்றது.

91இல் புலிகள் நடாத்திய ஆ. க. வெ. சமரின்போதும் அதைத் தொடர்ந்து அரசபடைகள் நடாத்திய மின்னல் இராணுவ நடவடிக்கையின்போதும் புலிகள் தரப்பில் கணிசமான உயிர் இழப்பு ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால், அணிகளின் மீள் ஒழுங்கு படுத்துகையிலும் - புதியமுறைச் சண்டைப் பயிற்சிகளிலும் அதற்கான தந்திரோபாயத் திட்டமிடல்களிலும் காலம் செலவழிந்ததனால், அந்தஆண்டில் புலிகள் இயக்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஒரு மந்தநிலை இருந்தன. இதனால், படைத்தரப்பிலும் அதிகளவு ஆள் இழப்புக்கள் ஏற்படவில்லை.

1994 ஐப் பொறுத்தளவில், சிங்கள தேசத்தில் எழுந்த சமாதானச் சலசலப்புகளால் போர் நிலவரம் ஒரு கட்டுக்குள் இருந்தது. சிங்கள தேசத்தின் தேர்தல் ஆண்டாக அது இருந்தது. சந்திரிகா அம்மையாரின் சமாதான கோசங்களும் - தேர்தலில் அவர் வெற்றி பெற்றபின் - புலிகளுக்கும், சந்திரிகா அரசாங்கத்திற்குமிடையே நடந்த சமாதானத் தூதுகள் - மற்றும் போர் ஓய்வு காரணமாகவும் குறைந்தளவு படையிழப்பைக்கொண்ட ஆண்டாக 1994 அமைந்திருந்தது.

எனினும் 95 ஆம் ஆண்டு இராணுவ இழப்பானது ஒரு உயர் நிலைக்கு சென்றது. அப்போதிருந்து, ஆண்டுதோறும், அது வளர்ந்து செல்வதையும் வரைபடம் காட்டுகின்றது.

95 ஆம் ஆண்டில் - போர் ஓய்வு காரணமாக எட்டு மாதங்கள் மட்டுமே சண்டை நடந்தது. எனினும் அந்த எட்டு மாதங்களிலும் சுமார் 1700 படையினர் பலியாகியிருந்தனர். எனினும். 96 ஆம் ஆண்டு 2600 ற்கும் அதிகமான படையினர் பலியாகியிருந்தனர். இதேவேளை, எட்டு மாதங்களே முடிவடைந்துள்ள இந்த ஆண்டில் ( 97 ) இதுவரை, 2200 ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகி, அது மேலும், அதிகரித்துச் செல்லும் போக்கையே காணமுடிகின்றது. அதாவது, படைத்தரப்பின் ஆள் இழப்பு எல்லை மீறி உயர்ந்து செல்கின்றது.

இப்போது, போர் உயர்ந்த கட்டத்திற்கு சென்றுள்ளது. சிங்கள அரசாங்கத்தின் நில ஆக்கிரமிப்பு ஆசை பலத்த பலப்பரீட்சைக்கு உள்ளாகி விட்டது. முன்னோக்கி நகர்வதற்கு படைகள் மிகவும் சிரமப்படுவதும் ஒவ்வொரு அங்குல நகர்விற்காகவும் பெருந்தொகை ஆட்களை இழப்பதும் - ராங்குகள் உட்பட பாரிய மரபுப்போர்க் கலங்களை இழப்பதும் - இப்போது அதிகரித்தபடி செல்கின்றது.

இரண்டாம் ஈழப்போரின் போது ( 90 - 94 ) 15 கடற்கலங்களையும் 8 வான் கலங்களையும் சுமார் 5500 படையினரையும் சிங்களப்படை இழந்திருந்தது.

இதேவேளை, இரண்டு வருடமும் நான்கு மாதமுமே நிறைவடைந்துள்ள மூன்றாவது ஈழப்போரில் இதுவரை சிங்களப்படை 17 விமானங்களையும், 12 கடற்கலங்களையும், 6500 ற்கும் மேற்பட்ட படையினரையும் இழந்துள்ளது. இதேவேளை, சக்தி வாய்ந்த மரபுப்போர் ஆயுதங்களில் 20 ராங்குகளையும் 15 ஆரில்லறிகளையும் அது இழந்துள்ளது.

இதேவேளை, முதலாம் ஈழப்போர் காலத்தில் சிங்கள அரசாங்கங்கள் தமது பாதுகாப்புச் செலவீனமாக நாளொன்றுக்கு 5 இலட்சம் ரூபாய்களை செலவிட்டிருந்தன. இரண்டாம் ஈழப்போர் காலத்தில் இது நாளொன்றுக்கு 5 கோடி ரூபாவாக உயர்ந்தது. மூன்றாம் ஈழப்போர் காலத்தில் இது, இன்று, நாளொன்றுக்கு 14 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

சிங்களப்படைக்குச் சார்பானவகையிலேயே போர் செல்கின்றது என்ற அரச தரப்பு வாதம், வெறும் மாயை; என்றே மேற்குறித்த களத்தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.


அத்துடன், புலிகள் பெற்றுவரும் மரபுப்போர்ப்பலத்தையும் - ஆட்தொகை அதிகரிப்பையும் – சண்டைத்திறன் வளர்ச்சியையும் கோட்டுவரைபடமாக்கிப் பார்த்தால், அதைப்பார்க்கும் சிங்களத் தளபதிகள் அதிர்ச்சியடைவார்கள். O

## பொருளாதாரச் செலவு

| ஆண்டு | | | கோடி |
|---|---|---|---|
| 1983 | — | — | 184 |
| 1984 | — | — | 250 |
| 1985 | — | — | 400 |
| 1986 | — | — | 500 |
| 1987 | | | |
| 1988 | — | — | 600 |
| 1989 | | | |
| 1990 | — | — | 1000 |
| 1991 | — | — | 1500 |
| 1992 | — | — | 1800 |
| 1993 | — | — | 2000 |
| 1994 | — | — | 2500 |
| 1995 | — | — | 3100 |
| 1996 | — | — | 4800 |
| 1997 | — | — | 5200 |

| | பலியான படையினர் |
|---|---|
| ஈழப்போர் I | 797 |
| ஈழப்போர் II (ஏறக்குறைய) (4½ வருடங்கள்) | 5500 |
| ஈழப்போர் III ( .. ) (இதுவரை 2 வருடம், 4 மாதங்கள்) | 6500 |

அட்டவணை – I



# “செத்தவர் செருப்புக்காக காத்திருப்பவர்கள்”

## “உண்மையில் நிகழ்காலம் அல்லது எதிர்காலம் என்றொன்று இல்லை ஏனெனில் இறந்தகால நிகழ்ச்சிகளே திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன”

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே 'தமிழ்ச்சாதி' என்கிற தலைப்பில் ''விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயக் கருதியிருக்கிறாயடா?'' என பாரதி பாடிய பாடல், இந்த நூற்றாண்டின் முடிவிலே, இன்றைக்கு, நாமும் தமிழர் எனச் சொல்வோர் சிலருக்கு மிகவும் பொருத்தமுடையதாகின்றது. தமிழீழ அன்னையே, இவர்கள் அரங்கேற்றும் அரசியல் அபத்த நாடகத்தை பார்த்து அயர்ந்துதான் போய்விட்டாள். தந்தை செல்வாவிற்கு நூற்றாண்டு விழா என்கிற சாட்டிலாவது தலையை நீட்டலாமா எனப் பார்க்கும் இவர்கள், தந்தையின் வாய்க்கூடாக வெளிவந்த, அவரது, இறுதியானதும் அறுதியானதுமான வாக்குமூலத்தை முற்றாக மறந்துவிட்டவர் போல் நடிக்கின்றனர். 1975 ஆம் ஆண்டில் காங்கேயன்துறை இடைத் தேர்தலில், 1947ஆம் ஆண்டின் பின்னான தனது அதிக பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற தந்தை என்ன கூறியிருந்தார். ''அன்னியரால் வலுக்கட்டாயமாக இணைக்கும் வரை வரலாற்றின் முழுக் காலப்பகுதியிலும் தமிழரும் சிங்களவரும் தனித்தான தன்னாட்சியுள்ள மக்களாகவே வாழ்ந்தனர். அத்தோடு இங்கே நினைவு கொள்ள வேண்டியது என்னவென்றால், தமக்கும் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேதான் தமிழர் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்றனர். கடந்த 25 வருடங்களாக ஐக்கிய இலங்கைக்குள் சிங்களவர்களுக்கும் சமமான அரசியல் உரிமைகளைப் பெற நாம் எடுக்காத முயற்சிகள் இல்லை. ஆனால், சுதந்திரம் என்கிற வாய்ப்புத் தந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, மாறி மாறி வந்த சகல சிங்கள அரசாங்கங்களும் எமது அடிப்படை உரிமைகளை மறுத்து, எம்மை அடிமை நிலைக்கு தள்ளிய மனவருத்தத்திற்குரிய செயலே இதுவரை நடந்தது. தமிழருக்கும் சிங்களவருக்கும் பொதுவான தன்னாட்சியுரிமை என்கிற ஆட்சியுரிமையை பயன்படுத்தியே, இப்படியாக தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசுகளால் செய்ய முடிந்தது. நான் மக்களுக்கும் நாட்டிற்கும் இத்தால் பிரகடனப்படுத்தவது என்னவென்றால் - இத் தேர்தலின் முடிவைதமிழ்மக்களிடம் ஏற்கெனவே பாரப்படுத்தப்பட்டிருந்த தன்னாட்சி உரிமையை பயன்படுத்தி, அவர்கள் விடுதலை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும என்பதற்கான மக்கள் ஆணையாக – நான் கருதுகிறேன், தமிழர் ஐக்கிய முன்னணியின் சார்பில் இந்த ஆணையை முன்னெடுத்து செல்வேன் என இத்தால் நான் உறுதி கூறுகிறேன்''

எவ்வளவு தெளிவான – தந்தையின் மாசற்ற உள்ளத்திலிருந்து வெளிவந்த உயிர்ப்புக் குரலிது. 1976ஆம் ஆண்டு நவம்பர் 16இல் நாடாளுமன்றில் தந்தை பின்வருமாறு மெல்லிய குரலில் உறுதிபடக் கூறினார் ''இணைப்பாட்சி (சமஷ்டி) அரசியலமைப்பிற்கான கோரிக்கையை நாம் கைவிட்டு விட்டோம். எமது இயக்கம் அகிம்சை முறையிலிருக்கும். சிங்கள மக்கள் என்றோ ஒரு நாள் எமது கோரிக்கையை வழங்குவார்கள். நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வேறான தனி நாடொன்றை அப்போது எம்மால் அமைக்கக்கூடியதாகவிருக்கும்'' எவ்வளவு நம்பிக்கையான, தீர்க்க தரிசனமான குரல். இந்தக் குரலை தமிழர் எவராலும் மறக்கமுடியுமா? ஆனால் மறந்து விட்டார்களே. அண்மையில் அவுத்திரேலிய வெளிநாட்டமைச்சர் கொழும்பிற்கு வந்திருந்தபோது, அவரைச் சந்தித்த புளுகத்தில், தந்தையின் வழி நிற்பதாக கூறுவோர் என்ன கூறினர்.

''நாங்கள் சந்திரிகாவின் அரசியல் பொதியை ஆதரிக்கின்றோம் நாம் அகிம்சாவாதிகள்'' என தமது அரசியல் வணிககுறி அடையாளத்தை வெளிப்படுத்தினர். இவர்களைப் பற்றி மட்டுமல்ல, ஆயுதங்களை கைவிட்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் குதித்து அதில் நீச்சலடிப் போர் பற்றியும் அண்ணல் காந்தி அன்றே கூறிவிட்டார். ''கோழைத்தனத்தை மறைக்க அகிம்சாவாதியாக இருப்பதை விட வன்முறையாளனாக இருப்பதே எவ்வளவோ மேல்''



தமிழீழ அன்னை அயர்ந்து போனதற்கு பட்டியலிடக்கூடிய பல்லாயிரம் காரணங்கள் உண்டு. இவையாவற்றினையும் தொகுத்து, பட்டறிவு என்னும் பல அத்தியாயங்கள் கொண்ட நூலாக, அன்னை, எப்போதோ வெளியிட்டுவிட்டாள். அதனடிப்படையிலேயே இறுதிப் போராட்ட வடிவமாக, ஆயுதப் போராட்டவடிவம் உருப்பெற்றது உலகறிந்த உண்மை. இப்போது மீண்டும் அதனையே தமிழீழமக்கள் நினைவு கூரவேண்டிய நிலையேற்பட்டுவிட்டது. இந்நூலின் முதல் அத்தியாயம் தமிழர் மீதான அடக்குமுறைச் சட்டவடிவங்கள் பற்றியது. 1948 குடியுரிமை பறிப்புச் சட்டம், 1956 ஜூன் தனிச்சிங்களச் சட்டம். 1979 பயங்கரவாதத் தடைச்சட்டம் ஈறாக இன்றைய அவசரகால நிலைச் சட்டம் வரை இதனுள் அடக்கம் – இரண்டாம் அத்தியாயத்திலே சிங்களவர் எழுதி எழுதிக் கிழித்த ஒப்பந்தங்கள் பற்றியது: 1920களில் மேல் மாகாணத்தில் தமிழர்க்கு பிரதிநிதித்துவம் தருவதாகக் கூறி ஏமாற்றிய மகேந்திரா உடன்பாட்டோடு இவ்வேமாற்றுப்படலம் ஆரம்பமாகின்றது. மூன்றாம் அத்தியாயமோ குருதிக் கறை நிறைந்தது. தமிழர் மீதான இன அழிப்பு வன்முறை பற்றிய விபரங்கள் நிறைந்தது. 1956யூனில் தொடங்கி 150 தமிழரை பலியெடுத்த இன அழிப்புவன்முறைகள், தொடர்ந்து 1983 கரும் யூலை வரையும், காலத்திற்கு காலம் பூவும் பிஞ்சுமாக, காயும் கனியுமாக தமிழர் உயிரை கொத்துக் கொத்தாக பறித்த படுகொலைகளும் என தமிழர் குருதியால் எழுதப்பட்ட அத்தியாயமிது. அடுத்த அத்தியாயமோ இந்தியத் தலையீட்டின் விளைவுகள் பற்றியது; அவற்றின் தோல்வி பற்றியது; சிங்களத் தலைமை எவ்விதம் இம் முயற்சிகளை சீரழித்தது என்பது பற்றியது: நரசிம்மராவ், பார்த்தசாரதி போன்றோர் 1983 யூலை வன்முறையையடுத்து தூதுவர்களாக வந்து தயாரித்த இணைப்பு 'சி' தீர்வுத்திட்டத்தினை ஜே. ஆர். நிராகரித்த விதம்; 1985 யூலை மாதத்து திம்புப் பேச்சுவார்த்தையை குழப்ப, வவுனியாவில், படைகளைக்கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட தமிழரை கொன்றுகுவித்த மோசம்; 1986 நவம்பர் பெங்களூர் பேச்சுவார்த்தையின் போது தென் தமிழீழத்தை மூன்று துண்டாக்கும் நாசகாரத்திட்டத்தை முன்வைத்து பேச்சுக்களை வெற்றியடையாமல் பார்த்துக் கொண்ட முறை; டிசம்பர் 19 ஆம் திகதி திட்டத்தினை, முஸ்லிம்கள் எதிர்ப்பதாக சாட்டுக் கூறி. அதை முறியடித்த தன்மை. 1987 இலங்கை-இந்திய உடன்பாட்டினை கூட இருந்தே குழிபறித்து, கேலிக் கூத்தாக்கிய ஜே. ஆரின் குள்ளநரித் தந்திரம் என, கண் முன்னே நடைபெற்ற இவ் ஏமாற்று வித்தைகளை நன்கறிந்த பின்னும், சந்திரிகாவின் அரசியல் பொதியை, அமைதிக்கான போரை ஆதரிக்கும் நயவஞ்சகத்தை என்னவென்று அழைப்பது? ''தமது சொந்த நலன்களுக்காக தமது நாடு உயிர்துறக்க வேண்டுமெனவிரும்புபவர்கள்'' என அறிஞர்கள் வகைப்படுத்தும் இழிதகைமை உடையவர்கள் இவர்கள்.

ஈழத் தமிழன்னையின் வரலாற்றுப் பட்டறிவு நூலின் இறுதி அத்தியாயமோ, தமிழ் மக்கள் அனைவருக்கும், இன்று உக்கிரமாக நடைபெறும் இறுதிப் போரின் உண்மையான முகத்தை, அதன் வரலாற்று வழிவந்த காரணத்தை தெளிவு படுத்துகின்றது. சிங்களம் தனது முழுப்பலத்தையும், வளத்தையும் விரல் நுனியில் திரட்டி, தனது நாட்டின் பொருண்மிய எதிர்காலத்தையே பணயம் வைத்து இப்போரை ஏன் நடத்துகின்றது? நிலம் – நிலம் – நிலம்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பதே வரலாற்றுத் தாயின் வரைவிலக்கணம். 1930 களிலே டி. எஸ். சேனநாயக்காவின் மூளையிலே இப்போர் தொடங்கிவிட்டது. தமிழர்களைக் கீழ்மைப்படுத்தி, அவர்களது பரம்பரை வாழிடங்களை சிதைத்தல், துண்டாடல் என்கிற பேரினவாதத்தின் பெரும் திட்டத்திற்குள், முதலாம் கட்டமாக தென்தமிழீழம் சிங்கள மயமாக்கப்பட்டு தொடர்ச்சியான தென்தமிழீழத் தாயகப் பகுதியே துண்டாடப்பட்டது. இது எவ்விதம் நடைபெற்றது?

ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி என்கிற பெயரில் பட்டிப்பளை – கல்லோயாவாக, நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்பு என்கிற பெயரில், பதிவில் குளம் பதவியா ஆகி, அல்லை, கந்தளாய் குளங்கள் சிங்களவர் வயல்களுக்கு தமிழர் நீரைப் பாய்ச்ச, 1960ம் ஆண்டு, திடீரென, சிங்களவரை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்றது. 1970களில் 1500 சதுர மைல் பரப்பளவில் அம்பாறை, சேருவாவில என சிங்களத் தொகுதிகள் முளைத்தன. இவ்வாறாக புவியியல் ரீதியாக தொடர்ச்சியாகவிருந்த தென்தமிழீழ தாயகம் அம்பாறை எனும் சிங்கத்தின் வாயால் துண்டாடப்பட்டது. இது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட முதலாம்கட்டம்.

**வே. பாலகுமாரன்**

இரண்டாம் கட்டமோ இன்றும் ஆபத்தானது. தமிழீழத் தாயகத்தையே இருகூறாக்குவது; பாலத்தினிய மண்ணின் கேந்திரப் பகுதியில் அமைந்த யூதக்குடியேற்றங்கள் போல மணலாற்றின் இதயத்தில் 3000ற்கும் மேற்பட்டசிங்களக்குடும்பங்கள் தொடக்கத்தில் எவ்விதம் குடியேற்றப்பட்டன? 1984ம் ஆண்டு டிசெம்பர் 24ஆம் நாள் - தமிழர் வாழ்வில் கரிநாள். நாயாற்றிற்கு மேற்கே, தெற்கே பல பத்து தொன்மைத் தமிழ் கிராமங்கள் சிங்கள சேர்பியரால் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்ட நாள். இதன் விளைவு, 1986ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் வெலிஓயாவில் சிங்கள வாக்காளர் எனும் புதுப்பட்டியல் இணைக்கப்பட்டது. 1988ம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி அடுத்த அடி – அன்று வெளியிடப்பட்ட சிங்களத்தின் பிரகடனமொன்றில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தின் பெரும்பகுதி 'விசேட பாதுகாப்பு வலயமாக' குதறி எடுக்கப்பட்டது. இதன் எல்லைகளை நோக்குவோர், இன்று நடக்கும் போரின் சூக்குமத்தை உடனே புரிந்து கொள்வர். வடக்கு எல்லை, புளியங்குளம் – முல்லைத்தீவு பிரதான சாலையின் நெடுங்கேணி சந்தியாம். கிழக்கில், தண்ணீரூற்று – குமுழமுனைச்சாலை, நாயாற்று கடனீரேரியில் சந்திக்கும் பகுதியாம். தெற்கின் எல்லையானது, கெப்பொற்றிக்கொல்லாவை – புல்மோட்டை வீதியால் நடுவாகச்சென்று, பதவியா குளத்தின் வலது கரை கால்வாயில் போய்முடிகிறதாம். எப்படிப் போகின்றது கதை? குத்துமதிப்பாக பார்த்தாலும், திருமலை மாவட்டத்தில், முன்னர் தமிழர் விரட்டப்பட்ட

(9 ஆம் பக்கம் பார்க்க)

*தனது நாட்டின் பொருண்மிய எதிர்காலத்தையே பணயம் வைத்து இப்போரை ஏன் நடாத்துகின்றது? நிலம் – நிலம் –நிலம் தான். ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவீருத்தி என்கின்ற பெயரில் பட்டிப்பளை – கல்லோயாவாகியது. பதிவில் குளம் பதவியா ஆகியது. அல்லை, கந்தளாய் குளங்கள் சிங்களவர் நிலங்களுக்கு தமிழர் நீர்பாச்சப்பட்டது. திடீரென 1960இல் சிங்களவரை பெரும்பான்மையாகக்கொண்ட அம்பாறை மாவட்டம் தோன்றியது. 1970களில் 1500 ச. மைல் பரப்பளவில் சேருவாவில – அம்பாறை சிங்களத் தேர்தல் தொகுதிகள் முளைத்தன. 1984ம் ஆண்டு மணலாறு பகுதியில் இருந்த பல தமிழ்க்கிராமங்கள் குடியெழுப்பப்பட்டன. 1997இல் மணலாற்றின் பெரும்பகுதி நிலம் அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்படுவதாக அறிவித்தது. டி.எஸ். சேனநாயக்கா தொடக்கிவைத்த நில அபகரிப்பை – இன்று சந்திரிகா தொடர்கின்றார்.*

# இலட்சிய நட்பு

நான் உன்னோடு கதைக்கத் துடிக்கிறேன்
நீயோ என்னைக் காப்பாற்றத்
துடிக்கிறாய்

போராளிக்கு -
கிடைக்கின்ற விடுதலை மட்டுமல்ல .....
வருகின்ற சாவும் உறுதிதானே.

நண்பனே, எனக்கு நீ -
விளையாட்டுத் திடலில் கைமுறிந்தபோது
வீட்டுப்பாடம் எழுத உதவிய நாளில்...
கவண்கொண்டு காகம் அடித்தகாலத்தில்...
ஊரை அண்டிய ஆற்றில்
அக்கரை தொடும் போட்டியில் ———
திருட்டுத்தனமாகப் படம் பார்க்கையில்
அரட்டைச் சந்தியில் கலந்து
கதைக்கையில்
நண்பனாகவில்லை.

நம்நட்பு நடப்பட்டதும்
வேர்விட்டுக் கிளைபரப்பியதும்
எப்பொழுது என்று தெரியவில்லை
நம் தேச அடிமையை உணர்ந்து
திசை திரும்பியபோது
இனவெறியன்
நம் இனத்தின் தலையில் வைத்த
கொள்ளியும்
நம் நம்பிக்கைகள்: எதிர்காலம்
நாசமானதும்
விடுதலைக் கைகளின் வீரக்கதைகளும்
சகோதரர்களைப் பிடித்த அரசு
செய்த வதைகளும்
நம் நட்புக்கு விதை போட்டிருக்கலாம்

ஆனால்—
நம் புலிப்படைப் பயிற்சியின்போது
தொட்ட துவக்குகளும்
கற்ற பாடங்களும்.
விழுந்து எழுந்து ஓடிய
மதில்கள். தரைகள், ஏணிகள்
படுத்து எழும்பிய பாய்கள்
மலை உச்சியில் ஓலைக் கொட்டிலில்
உறையவைத்த ஊதல்காற்று
போர்வைக்கு மேலாக கூரையால்
விழுந்த

மழைநீர்ச் சொட்டு
நம் பசியை விரட்டிய
பயறு நிறைந்த ஒற்றை ஈயத்தட்டு
விடியலில் எழ அடிக்கும் ஊதுகுழல்
இவையெல்லாம்
உறுதியாக நம்மை இணைத்திருக்கும்.
களத்தில்
நாம் கண்ட வெற்றிகள்
சாதனைகள், இழப்புகள், கனவுகள்
நம் நட்பில் வேர்விட்டிருக்கும்.

இந்த நட்புவேர் கிளைபரப்ப .....
எதிரி
நம்மை சிந்தவைத்த
குருதித் துளிகளால்
எத்தனைமுறை நீர்விட்டான்!
நண்பனே!
நீயோ என்னைக் காப்பாற்றத்துடிக்கிறாய்
நானோ உன்னோடு கதைக்கத்
துடிக்கிறேன்.

போராளி —
விதைபோடாமல் விழுவதில்லை
வாழையைப் போல.

இது
உனக்குப் புரிந்தது தானே.

விடியலில் வீசும்
உப்புக் காற்றுத் தடவ
கடலலை தழுவிக் கிடந்த
அப் போராளித் தோழனின் உடும்பில்
தொழுத கிடந்த ஆயுதமும்,

குண்டு வெடிப்புகளுக்கிடையில் தவழ்ந்து
உடலையும் உயிரையும்
இம்மண்ணுக்குக் கொடுக்குமுன்
தன்துவக்கினை நம்மிடம் கொடுக்க
துடித்த துடிப்பும்
கொடுத்தபின்...
அவன் அடைந்த உவகையும்

இத்தேசத்தின் காவல் கருவிகளை
எடுத்துச் செல்ல
கடைசி முறையாக
நம்மை அழைத்த அக்குரலும்
எம்மிடம் சொல்லியது
அவர்களின் வீரச் சாவைமட்டுமா?
இல்லை -
போராளிக் கைகள் மீதுகொண்ட
நம்பிக்கையையும்
மீண்டும் மீண்டும் உயிர்த்தெழும்
நம் இலட்சியத்தையுமல்லவா.

- இரும்பொறை O

# சித்திரவதை

மட்டக்களப்பு

ஆரையம்பதி ஒரு கடலோரக் கிராமம்.

மீனவத் தொழில் அந்தக் கிராமத்திற்குச் சோறு போட்டது.

செல்லத்தம்பி ஐயாவுக்கும் அன்னநேசம் அம்மாளுக்கும் 5 குழந்தைகள்.

கடலன்னை அந்தக் குடும்பத்தை மகிழ்ச்சியாகத்தான் தாங்கி வைத்திருந்தாள். ஆனால் –

இந்தியர்களும், சிங்களவர்களும், முஸ்லிம் காடையர்களும் தொடர்ச்சியான நெருக்கடியைத் தந்தபோது தமிழீழத்தின் ஒவ்வொரு வீட்டுக்கும் நடந்தது போல – அந்தக் குடும்பத்தின் இயல்பு நிலையும் பாதிப்புக்குள்ளானது;



மூத்தவன் வீமராஜன் இயக்கத்திற்குப் போனான்.

கொஞ்சக்காலம் போக இந்தியர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

மீண்டும் –

சிங்களத் துப்பாக்கிகள் உயிர் விழுங்க ஆரம்பித்தன.

இந்தியர்களுக்குத் துணை போனவர்கள், சிங்களவர்களுக்குத் துணை போகவும் முண்டியடித்தார்கள்.

எங்கள் தாயகத்தின் தென் பிராந்தியத்தில் இரத்தத்தை உறைய வைக்கும் கொடிய நாட்கள் அவை.

வீட்டுக்குள் அடிக்கடி பாய்ந்து ''மூத்த பொடியன் எங்க?'' என்று உறுக்கத் தொடங்கினார்கள், சிங்களப் படையினர்.

ஓவ்வொரு தடவையும் எதையாவது சொல்லிச் சமாளித்து அனுப்பி வைத்தார்கள்.

எவனோ ஒரு துரோகி உறுதிப்படுத்தப்பட்ட தகவலைக் கொடுத்துவிட்டான்.

அவர்கள் வீட்டை முற்றுகையிட்ட ஒரு காலை, கடலுக்குப் போன அப்பா வந்திருக்கவில்லை. கடைசித் தம்பியும் தங்கையும் பள்ளிக்கூடம் போயிருந்தார்கள்.

அம்மாவோடு மகேந்திரனும் அடுத்த தங்கையும் வீட்டிலிருந்தார்கள்.

மகேந்திரனைப் பிடித்து ''அண்ணன் எங்கடா......?'' என்றார்கள் படையினர்.

''கொழும்பில் படிக்கிறார்'' என்றான் இவன்.

சுற்றிவர நின்று ஆவேசத்தோடு தாக்கத் துவங்கினார்கள் அவர்கள்.

மோசமான அடிகள்.

பயங்கரமான சித்திரவதை.

''ஐயோ ...... அடிக்காதிங்க, அவரு இயக்கத்தில!'' இயலாமையால் மகேந்திரன் கத்திவிட்டான்.

அவர்கள் நிறுத்தினார்கள்.

விழுந்து கிடந்தவனை ஒருவன் தூக்கி நிமிர்த்தினான்.

''மொதல்ல நீ பொய்தானே சொன்னது?''– கொச்சைத் தமிழில் கத்தினான்.

''வாயால தானே நீ பொய் சொன்னது'' உறுக்கினான்.

''இந்த வாயால தானே நீ பொய் சொன்னது'' - தொட்டுக் காட்டினான்.

மகேந்திரன் பேச்சு மூச்சற்றுச் சோர்ந்து நின்றான்.

வீட்டுக்கு முன்னாலிருந்த பெட்டிக்கடையில் ஓடிப்போய் மூன்று பட்டாசு வெடிகளை வாங்கி வந்தான் ஒரு சிங்கள வெறியன்.

மூன்றையும் சேர்த்துக் கட்டினார்கள். ''இந்த வாயால தானே நீ பொய் சொன்னது'' – ஒருவன் திரும்பவும் தொட்டுக்காட்டிக் கத்தினான்.

இரண்டு பேர் இறுக்கிப் பிடிக்க, அடுத்தவன் அந்தவாயிற்குள் வெடிகளைச் செருகினான்.

சட்டைப் பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்தான்.

அம்மா கதறினாள்; ஆசைத் தங்கை அலறினாள்; தம்பி நிலத்தில் புரண்டு கத்தினான்.

ஆனால், அந்த வெடிகளுக்கு இந்த அவலங்கள் எப்படிப் புரியும்.

அவை, சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதறின.

– தி. இனியவன் O

# செத்தவர்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னமரவடி, அமரிவயல், புல்மோட்டை பகுதியைச் சேர்த்துப்பார்த்தாலும் 50க்கு மேற்பட்ட தமிழர் வாழ்விடங்கள் மண்ணோடு மண்ணாகப் போகும் நிலை.

இனி மூன்றாம் கட்டம். சமகாலகட்டம். ஜயசிக்குறுய் காட்டும் கோலம்; இந்த இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டு பத்துநாட்களுக்குள், அம்மையாரின் அரசு, மணலாற்றுப் பகுதி தற்காலிகமாக அனுராதபுரத்துடன் இணைக்கப்படுவதாக அறிவித்தது. அதுவும் பதவியா பிரதேச செயலர் பிரிவோடு தானாம் இணைப்பு. சேனநாயக்கா தொடங்கியதை சந்திரிகாபண்டாரநாயக்கா முடித்து வைக்கின்றார். கடல் காணாத அனுராதபுர மாவட்டத்திற்கு கடல் எல்லையாகின்றது. அடிக்குமேலடி விழுந்து ஆமை வேகத்தில் இராணுவம் நகர்ந்தாலும, தமிழர் தாயகத்தின் இதயப் பகுதி எப்படியோ சிதைக்கப்படுகின்றது என்பதில் விசமத்தனமான மகிழ்ச்சி கொள்கின்றது சிங்களம். வெலிஓயாவிலுள்ள 6 வது பிரிகேட்டோடு நெடுங்கேணி இணைக்கப்படுமாம் – ஓமந்தைக்கு வடக்கே, புளியங்குளத்திற்கு கிழக்கே, நெடுங்கேணி, கென்ற்பாம் ஊடாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் வரை புதிய முன்னணி பாதுகாப்பு எல்லை போடப்படுமாம் என சிங்களம் தன்னை உரித்துக் காட்டுகின்றது.

''ஒடுக்குமுறைக்கு எதிராக மௌனமாக இருப்பவர்கள் அனைத்து அம்சங்களிலும் இறந்து விடுகின்றனர்'' என்பது நைஜீரியக் கவிஞன் ஒருவனின் கூற்று.

''ஒடுக்குமுறைக்கு எதிராக மௌனமாக இருப்பவர்கள் அனைத்து அம்சங்களிலும் இறந்து விடுகின்றனர்'' என்பது விடுதலைக்குரல் எழுப்பியதால் தூக்கிலிடப்பட்ட நைஜீரியக் கவிஞன் சோயிங்காவின் கூற்று. ஆனால் அகிம்சாவாதிகளும் ஆயுதங்களை ஆற்றில் வீசியோரும், இங்கே. ஒடுக்குமுறைக்கு துணையுமல்லவா போகிறார்கள். இவர்கள் ''செத்துப் போனவர் செருப்புக்காக காத்திருப்பவர்கள்'' ஆனால் காலம் காத்திருக்குமா? இப்போது வன்னியில் வானம் மட்டும் சிவப்பதில்லை; தமிழீழ அன்னையின் புதல்வர்கள் சிந்தும் குருதியால் மண்ணும் சிவக்கின்றது; ''காலமும் மனித ஆற்றலும்'' இணைந்த வரலாற்றின் உந்து சக்தியாக விளங்கும் புலிகளை கண்டு சிலிர்ப்படைகின்றது.

O

# அனுமார் வாலும் - ஆப்பிழுத்த குரங்கும்

யாழ்ப்பாணத்தை - கிளிநொச்சியை ஆக்கிரமித்த பின்னர் வெற்றி மமதையில் சிங்களப்படைத் தலைமை திளைத்தது. 'புலிகளின் கதை முடிகின்றது' எனக் கூட்டிக் கழித்துக் கணித்தது. களைத்த புலிகளை இறுதிவரை துரத்திச்சென்று கொல்வது என்ற வேட்டைத்தந்திரத்தைக் கைக்கொண்டு புலிகள் இயக்கத்தை அழித்துவிடலாம் என்று அது கருதியது. அந்த நோக்கத்துடன் வன்னியின் புவியியல் மையத்தை ஊடறுத்து ஜயசிக்குறுயை ஆரம்பித்தது.



குறைந்த வளங்களை வைத்துக்கொண்டு அதிஉச்ச பயனைப்பெறும் போர்க்கலையில் தலைவர் பிரபாகரன் ஒரு மேதை

13 மே 1997 அன்று, நெடுங்கேணியைநோக்கி - ஓமந்தையை நோக்கி என இருமுனைகளூடாக படைநகர்த்தப்பட்டது.

நெடுங்கேணியிலிருந்து - நைனாமடு ஊடாக புளியங்குளத்தை நோக்கி ஒரு நகர்வுப்பாதையையும் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணச் சாலைவழியே புளியங்குளத்தை நோக்கிய அடுத்த நகர்வுப்பாதையையும் ஜயசிக்குறுய் கொண்டமைந்திருந்தது.

இருமுனைப்படைகளும் புளியங்குளச்சந்தியைக் கைப்பற்றிச் சந்தித்தால் இரு நகர்வுப்பாதைகளுக்கும் இடையேயுள்ள நிலப்பகுதியை இடுக்கிப் பிடிக்குள் அகப்பட்ட பகுதியாக அமுக்கிப்பிடிக்கும் திட்டத்தை அமுலாக்கிவிடலாம் என்று அரசபடைகள் எண்ணுகின்றன.

எனினும், புளியங்குளம் சந்தியை கைப்பற்றமுடியாது - அதற்கு அருகில் நின்றவாறு - கடந்த 70 நாட்களாக சிங்களப்படைகள் திண்டாடுகின்றன. இதுவரை நான்கு பாரிய முயற்சிகளைஎடுத்துதோற்றுள்ளன.

22.06.97 அன்று ஒரு நகர்வை செய்த படையினர், ஒரு ராங்க்கை இழந்து முயற்சியில் தோற்றனர்.

அதுபோல, 19.08.97 அன்றும் ஒரு முயற்சியை எடுத்து இரண்டு ராங்குகளை இழந்து-ஒரு துருப்புக் காவியை புலிகளிடம் பறிகொடுத்து நகரமுடியாது முடங்கினர்.

மீண்டும் அடுத்தநாள் 20.08.97 அன்றும் ஒருநகர்வை எடுத்து ஒரு ராங்க்கை இழந்து முயற்சியில் தோற்று நின்றனர். அதுபோல 26.8.97 அன்றும் ஒரு ராங்கை இழந்து முயற்சியில் தோற்று நிற்கின்றனர்.

வவு - கிளி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி குடாநாட்டிற்கு ஒரு பிரயாணப் பாதையைத் திறப்பதே ஜயசிக்குறுயின் இராணுவ இலக்கு என - ரத்வத்த - ஏற்கெனவே பகிரங்கப்படுத்தியிருந்தார்.

படையினரின் நகர்வு முயற்சிக்கு குறுக்கே புலிகளின் பலம் தடைக்கல்லாக நின்றபோது 'புதிய வழிகளைக் கடைப்பிடித்து' நடவடிக்கையைத் தொடரப்போவதாக, சிங்கள இராணுவத் தளபதி றோகான் தளுவத்த சூளுரைத்திருந்தார்.

புலிகளின் கோட்டையாகிய குடாநாட்டைக்கைப்பற்றி வெற்றி கொண்ட தமது படையினர்க்கு; ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி வரையான 12 கி.மீ. நெடுஞ்சாலையைக் கைப்பற்றி நிலைகொண்ட தமது படையினர்க்கு ஜயசிக்குறுயின் இராணுவ இலக்கை எய்துவதற்கு எதுவுமே தடையாக இருக்கமாட்டாதென்றே - சிங்களத் தளபதிகள் - இறுமாந்திருந்தனர்.

சுமார் 50 நாட்கள் தொடர்ந்து நடந்த சூரியக்கதிர் 1 நடவடிக்கையில் ஏறக்குறைய 750 துருப்புக்களை இழந்து, சிங்களப்படை வலிகாமத்தைக் கைப்பற்றியிருந்தது. அதுபோல சுமார் மூன்று மாதங்களாக - இடைவிட்டு-நடந்த சத்ஜய சமரில் சுமார் 500 துருப்புக்களை இழந்து கிளிநொச்சியைக் கைப்பற்றியிருந்தது.

அப்படியாயின் 110 நாட்களையும் கடந்த நிலையிலும் ஜயசிக்குறுய் ஏன் தடுமாறுகின்றது!

றிவிரசவிலும், சத்ஜயவிலும் புலிகள் இயக்கம் தனது படைபலத்தைப் பாதுகாப்பதில் முன்னுரிமை கொடுத்தது. இதனால், நிலத்தை ஆக்கிரமிப்பதில் சிங்களப்படைக்கு வாய்ப்பேற்பட்டது.

ஜயசிக்குறுயின் போது சிங்களப் படையின் படைபலத்தைச் சிதைப்பதிலேயே, புலிகள், முழுமூச்சாய் இருக்கின்றனர். இதனால, முன்னேறி நிலத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொணடுவர - சிங்களப்படை- சிரமப்படுகின்றது.

ஜயசிக்குறுய் 110 நாட்களை அடைந்துவிட்டது. இதுவரை 1200 படையினரைப் பலிகொடுத்து விட்டது. 3500 படையினர் காயம் பட்டனர் என, இராணுவப் பேச்சாளர் ஒப்புக்கொண்டிருந்தார். 13 ராங்க்குகளை இழநதுவிட்டது - 4 ஆரில்லறிகளை இழந்துவிட்டது. வண்டி வண்டியாக எறிகணைகள்-குண்டுகளை இழந்துவிட்டது. ஒரு துருப்புக்காவி உட்பட பல மரபுப் போர் ஆயுதங்களை, வெடிப்பொருட்களை பறிகொடுத்துவிட்டது. ஆயினும், இலக்கின் மூன்றில் ஒரு பகுதியையே, அதனால் அடையமுடிந்துள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கையில் புலிகளுக்கு ஏற்பட்ட ஆள் இழப்புகளை, அரசாங்கம், மிகைப்படுத்திப் பிரச்சாரம் செய்கின்றது. ஒவ்வொரு சண்டைகளின் போதும் புலிகளின் இழப்பு என்று சொல்லி இராணுவப்பேச்சாளர், சரத்முனசிங்கா வெளியிடும் கணக்கு விபரங்களை ஒன்றுகூட்டிப்பார்த்தால் அந்தத்தொகை 2500 ற்கும் அதிகமாக வரும்.

சிங்களப்படை வீரர்களையும் - சிங்களமக்களையும் உற்சாகப்படுத்துவதற்காக படைத்தரப்பு இழப்பைவிட, மூன்று - நான்கு மடங்குகளாக புலிகளின் ஆள் இழப்பைச் சொல்லிக்காட்டுவது சிறீலங்கா அரசாங்கத்தின் ஒரு இராணுவ மரபு. அத்துடன், படையினர் பயன்படுத்தும் பிரமாண்டமான படைக்கல சக்தியின் தொகையைக் கருத்தில் எடுத்தால் பெருமளவு புலிகள் பலியாகவேண்டும் என்று சிங்களத்தரப்பு ஊகிக்கின்றது. ஆனால், புலிகளின் போரிடும் திறனும் மற்றும் எதிர்த்தந்திரோபாயங்கள் காரணமாகவும் தமது தரப்பு இழப்புக்களை புலிகள் எப்போதுமே ஒரு கட்டுக்குள் வைத்திருக்கின்றனர்.

உண்மையில் இதுவரை ஜயசிக்குறுய் சண்டைகளில் சுமார் 500 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். சிலநூறுபேர் காயமடைந்துள்ளனர். ஒப்பீட்டளவில் குறைந்தளவு இழப்புகளுடன் படையினர்க்கு பாரிய ஆள் - ஆயுத இழப்புகளை ஏற்படுத்தி -புலிகள் - சாதனை புரிந்துள்ளனர். அத்துடன், ஜயசிக்குறுயின் இராணுவ இலக்கையும் கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

களத்தில் பலியாகும் அல்லது படுகாயமடையும் படையினரின் இடத்தை நிரப்பவென்றும் - கைப்பற்றப்படும் வீதியின் நீளம் கூடக் கூட அதைப் பாதுகாப்பதற்கென்றும் ஜயசிக்குறுய் படைக்கு மேலதிக ஆட்கள் தேவைப்படுகின்றனர். இந்த மேலதிக ஆட்பற்றாக் குறையை ஈடுசெய்ய, அரசாங்கம், எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பது திண்ணம். ஆனால், இது நடைபெறும்போது ஏதோ ஒரு களமுனை - அது குடாநாடு அல்லது கிழக்கு - பலவீனமடையும். பலவீனமான பகுதிகள் மீது புலிகள் பலமான தாக்குதலை நடாத்தலாம் என்ற யதார்த்தமான அம்சத்தை சிங்களத்தின் இராணுவ ஆய்வாளர்கள் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

ஜயசிக்குறுய் சமரைப் பொறுத்த வகையில் தாக்குதற் போர்முறையிலும் [ OFFENSIVE ] - தடுத்து நிறுத்த முயலும் தற்காப்புப்போர் முறையிலும் [ DEFENSIVE ] புலிகள், திறமைகாட்டி வருகின்றனர்.

ஜயசிக்குறுய் ஆரம்பமாவதற்கு முன்னரே - தலைவர் பிரபாகரன்- எடுத்த முன்னேற்பாடுகளே புலிவீரர்களின் இந்தப் போர்ப்புலமைக்கு பிரதான காரணம்.

போராளிகளின் சண்டைத் திறனை மேலும் வளர்த்துவிடும் செயல்முறைகளை வகுத்துச்செயற்படுத்தியும் - மரபுப் போர் ஆயுதங்களை எடுத்து-அவற்றைத் திறமையாகக் கையாளப் பயிற்றுவித்தும்- ஆலோசனைகள் கூறியும் தமிழா சேனையின் போர்வலுவை உயர்த்தியிருந்தார். இந்தப் போர்வலு, ஜயசிக்குறுயின் இராணுவ இலட்சியத்திற்கு பலத்த சவாலாக இருக்கின்றது.

சிங்களத்துப் படைகளுடன் ஒப்பிடும்போது குறைந்த ஆள் எண்ணிக்கையையும் - சொற்ப படைக்கலங்களையும் வைத்துக் கொண்டு அவற்றிலிருந்து அதிக உச்சப்பயனைப் பெற்றுக் கொள்ளும் போர்க்கலையில் - தலைவர் பிரபாகரன் - ஒரு மேதையாகவே - உலகில் இன்று - கணிக்கப்படுகின்றார்.

O

> *இதுவரை. ஜயசிக்குறுயில், 1200 படையினர் பலியாகி விட்டனர்: 3500 பேர் காயப்பட்டுள்ளனர். 15 ராங்க்குகளை, 4 ஆர்ல்லறிகளை இழந்துள்ளனர். ஒரு துருப்புக்காவி உட்பட பல மரபுப் போர் ஆயுதங்களை புலிகள் கைப்பற்றியுள்ளனர். சுமார் 500 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.*

> *ஒப்பீட்டளவில், குறைந்த ஆள் எண்ணிக்கையையும் சொற்ப படைக்கலங்களையும வைத்துக்கொண்டு, இவற்றிலிருந்து அதிஉச்சப் பயனைப் பெற்றுக்கொள்ளும் போர்க்கலையில், தலைவர் பிரபாகரன், ஒரு மேதையாக விளங்குகின்றார்.*

> *சூரியக்கதிரிலும் - சத்ஜயவிலும் - புலிகள் இயக்கம்- தனது படை பலத்தின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுத்தது. ஜயசிக்குறுயின்போது சிங்கள இராணுவத்தின் படைபலத்தை சிதைப்பதிலேயே புலிகள் முழுமூச்சாக உளளனர்.*

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்